PUBLIC LIBRARY
JAFFNA

ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படத்திற்குப் பொருத்தமான சொல்லின்கீழ் கோடிடுக.

* அவளிடம்/அவனிடம் புத்தகங்கள் உள்ளன.



* அவனிடம்/அவளிடம் ஒரு மலர் உள்ளது.



* அவன்/அவள் இனிப்பு சாப்பிட விருப்பம்.



* அவளிடம்/அவனிடம் சிவப்பு நிறக் காரொன்று உள்ளது.



1) இங்கு காணப்படும் தளபாடங்கள் 2 தருக.

..............................................

2) விளையாட்டு உபகரணம் ஒன்று தருக.

..............................................


3) இங்கிருக்கும் படுக்கை விரிப்பின் நிறம் யாது?

..............................................

4) அறையில் முகம் பார்க்கும் கண்ணாடிகள் இரண்டு உள்ளன. அவற்றில் X அடையாளமிட்டுக் காட்டுங்கள்.





இங்குள்ள தரவுகளுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கங்களை பொருத்தமான படத்தில் எழுதுக.



1. செவ்வகத்திற்குள் வட்டம்
2. சதுரத்திற்குள் இரண்டு முக்கோணிகள்
3. வட்டத்திற்குள் முக்கோணி
4. இரண்டு முக்கோணிகள்
5. சதுரத்திற்குள் வட்டம்
6. செவ்வகத்திற்குள் முக்கோணிகள்
7. சதுரத்திற்குள் வட்டம், முக்கோணி
8. செவ்வகத்திற்குள் சதுரம்

ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான பெயரை கட்டத்தினுள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.

apples potatoes oranges carrots watermelons
beans peaches cauliflower mangos onions




-ஜீநு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

# வானிலிருந்து பார்த்தால், தரையில் தெரியும் ராட்சத வட்டங்கள்



மேற்கு ஜோர்தானில் மத்திய பகுதியில் ராட்சத வட்டங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றை வானில் இருந்து அல்லது செய்மதியின்மூலம் மட்டுமே தெளிவாகப் பார்க்க முடியும். இந்த ராட்சத வட்டங்களின் (Big Circles) விட்டம் 720 அடிக்கும் 1,490 அடிக்கும் (220 மீற்றர் முதல் 455 மீற்றர்) இடைப்பட்டதாகும்.

## கண்டுபிடிப்பு


1920 ஆம் ஆண்டுகளில், இந்த ராட்சத வட்டங்களில் சில கண்டுபிடிக்கப்பட்டன. அதன்பின்னர் 1930, 1953 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் வானிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சில அளவீட்டுப் பணிகளின்போது அவற்றின் பரிமாணம் மற்றும் தோற்றம் என்பன மிகத் துல்லியமாகக் கணிக்கப்பட்டன.

அண்மையில் மேற்கு அவுஸ்திரேலியாவில் இருந்து இந்த ராட்சத வட்டங்கள் உள்ள பகுதிக்குச் சென்ற தொல்லியல் ஆய்வாளர்கள் சிலர், இந்த ராட்சத வட்டங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டனர். அந்த ஆய்வுகளின் அடிப்படையில் அவர்கள் அறிக்கை ஒன்றினைத் தயாரித்துள்ளனர்.



## ராட்சத வட்டங்கள்

அந்த அறிக்கையின்படி, மேற்கு ஜோர்தானின் மத்திய பகுதியில் 8 ராட்சத வட்டங்கள் உள்ளன. அவை வாடி-அல்-ஹசா (Wadi-Al-Hasa) எனுமிடத்திலிருந்து சஹாரா பாலைவனத்திலுள்ள செங்குத்தான மலைமுகட்டின் எல்லைப்பகுதி வரை பரவியுள்ளன. இவற்றைப் போன்ற மேலும் 4 ராட்சத வட்டங்கள் அஸ்ராக் பாலைவனச் சோலைக்கு (Azraq Oasis) வடக்கே அமைந்துள்ளன என்று தெரிவிக்கப் படுகின்றது. ஜோர்தான் நாட்டு மக்கள் அங்குள்ள ராட்சத வட்டங்களை 'கஸ்ர் அபூ இனாயா' (Qasr Abu Inaya) என்று அழைக்கின்றனர். இவற்றை தவிர, 2002 இல் சிரியாவின் 'ஹோம்ஸ்' (Homs) நகருக்கு அருகாமையில் மற்றுமொரு ராட்சத வட்டமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




''இந்த வட்டங்களின் நிர்மாணிப்பாளர்கள் மையப்புள்ளியொன்றைத் தெரிவு செய்து, அங்கு தடியொன்றை நாட்டு, அதில் கயிறு ஒன்றைக் கட்டி சுற்றி இழுத்துச் சென்று வட்டங்களை அமைத்திருக்கலாம்'' என மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டேவிட் கெனடி கூறுகின்றார். இவர்தான் இந்த ராட்சத வட்டங்கள் தொடர்பில் ஆராயும் குழுவின் தலைவராவார்.

## செப்புக் காலப் பகுதிக்குரியவை...

இந்த வட்டங்கள் நிர்மாணிக்கப்பட்ட காலப் பகுதி குறித்து பல்வேறு சந்தேகங்கள் நிலவுகின்றன. இவற்றை நிர்மாணிக்கப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் செப்புக் காலத்திற்குரியவையாகும் அல்லது ஆரம்ப வெண்கல (கி.மு.2000 இற்கும் 4500 இற்கும் இடைப்பட்ட) காலப்பகுதிக்குரியவையாகும் எனக் கூறப்படுகின்றது. சில வட்டங்களை நிர்மாணிப்பதற்கு கி.மு. 1 முதல் 7 ஆம் நூற்றாண்டுக்குட்பட்ட ரோமானிய காலப்பகுதிக்குரிய பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. (-இ)

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

தமிழ் FM வானொலியில்
வார நாட்களில் மாலை 3 மணி முதல் 5 மணி வரை
'ஆறாம் அறிவு' நிகழ்ச்சி கேளுங்கள்...
விஜய் சந்தா பரிசைப் பெறுங்கள்...!



தகவல்கள், விஞ்ஞான விளக்கங்கள், கேள்விகள்,
கணிதப் புதிர்கள் - இன்னும் பல சுவையான
அம்சங்களோடு - ஆறாம் அறிவு!
தமிழ் FM ▶ வன்னி 99.5 FM, யாழ்ப்பாணம் 99.7 FM
நாடு முழுவதும் 107.8 FM
இணையத்தில்: www.tamilfm.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசனின் ஐயம்

மங்களபுரி நாட்டின் அரசருக்கு ஒருநாள் கடவுள் என்பவர் யார்? அவரது ஆற்றல் என்ன? என்ற சந்தேகம் எழுந்தது. அவரது சந்தேகத்தை தீர்ப்பதற்கு அமைச்சர்களால் முடியவில்லை.அதனால், கோபம் அடைந்த அரசர், தனது தலைமை அமைச்சரிடம் ''என் சந்தேகத்தை தீர்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு... நாளை வரை உங்களுக்கு அவகாசம் தருகிறேன்'' என்று கூறிவிட்டார்.

தலைமை அமைச்சரும் வருத்தத்துடன் வீட்டிற்கு வந்தார். அவர் வருத்தத்தை அறிந்த அவரது பத்து வயது மகள் ''நான் நாளை வந்து



அரசரின் சந்தேகத்தை தீர்த்து வைக்கிறேன்'' என்றாள்.

அடுத்த நாள் அரச சபையில் அரசரிடம் அவள், ''அரசே, ஒரு குடுவையில் பால் வேண்டும்'' என்றாள். பால் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. பால் கொண்டு வந்தவனைப் பார்த்து அவள்... ''இந்தப் பாலின் நிறம் என்ன'' என்று கேட்டாள்.

''வெள்ளை நிறம்'' என்றான் அவன்.

''இப்பாலைக் கறந்த மாடு என்ன நிறம்'' என்றாள்.

''கறுப்பு நிறம்'' என்றான்.

''அந்த கறுப்பு நிற மாடு எதைத் தின்று இந்த பாலைத் தந்தது'' என்று மீண்டும் கேட்டாள் சிறுமி.

''பசும் புல்லை'' என்றான் சேவகன்.

அப்போது அவள் அரசரைப் பார்த்து, ''யார் பச்சைப் புல்லை கறுப்பு மாட்டிற்குக் கொடுத்து வெள்ளைப் பாலை உருவாக்குகிறாரோ, அவர்தான் கடவுள்... அவர் விந்தையான செயல்கள் அனைத்தையும் செய்யும் ஆற்றல் பெற்றவர்'' என்றாள். அரசனும் தனது ஐயம் தெளிவுற்றதை எண்ணி மகிழ்ந்தார்.


# முட்டாள் நாய்

வீதியில் சுற்றித் திரிந்துகொண்டிருந்த நாய் ஒன்று தவறிப் போய் அரண்மனைக்குள் நுழைந்தது. அங்குள்ள அறை ஒன்றுக்குள் நுழைந்த நாய்க்குப் பெரும் அதிர்ச்சி. ஏனெனில், சுற்றிலும் நூற்றுக்கணக்கான நாய்கள்அங்கு இருந்தன.

இதனால், எரிச்சலடைந்த நாய் ''உர்ர்....உர்ர்.....'' என்று உருமியது. அந்த நூறு நாய்களும் பதிலுக்கு ''உர்ர்... உர்ர்...'' என்றன.

நாய் சிறிது பயந்துவிட்டது. இருந்தும் கோபம் தாளாமல் ''லொள் லொள்'' என குரைக்க ஆரம்பித்தது.

அப்போது எல்லா நாய்களும் சேர்ந்து குரைத்தன. அந்த நாய்



குரைப்பதை நிறுத்தியவுடன் எல்லா நாய்களும் குரைப்பதை நிறுத்திக் கொண்டன.

மறுபடியும் நாய்க்கு கோபமும் பயமும் அதிகமானது. உடனே வெறி பிடித்ததைப் போல் தொடர்ந்து குரைக்க ஆரம்பித்தது. பதிலுக்கு அந்த நாய்களும் குரைத்தன.

இறுதியில் அந்த நாய் பயத்தில் குரைத்துக் குரைத்தே இறந்து போய்விட்டது. தான் நுழைந்தது நூற்றுக்கணக்கான கண்ணாடிகளைக் கொண்ட அறை என்பதும் தன்னைச் சுற்றிலும் இருந்தது தனது பிரதிவிம்பங்கள் என்பதும், தன்னைப் பார்த்துக் குரைத்தது சுற்றி இருந்த நாய்கள் அல்ல, தனது எதிரொலியே என்பதும் அந்த நாய்க்கு தெரியாமலேயே இறந்துவிட்டது.

**இந்த உலகமும் கண்ணாடி போன்றதுதான். நாம் கோபப்பட்டால் பதிலுக்கு கோபமே கிடைக்கும். அன்பு செலுத்தினால் அன்பே கிடைக்கும்.**

# அவசரம்

மதுர நாட்டை அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவரின் நல்லாட்சியால் மக்கள் மகிழ்ச்சியாக இருந்தனர். ஒருநாள் மன்னரது அமைச்சர்களில் ஒருவர் அரசரிடம் ''அரசே... உங்களுக்கு வைரம் என்றால் ஆசை என்று அறிவேன். நம் நாட்டில் மருதன் என்னும் வியாபாரியிடம் விலை மதிப்பற்ற வைரம் ஒன்று இருக்கிறது'' என்றான்.

உடனே அரசரும் மருதனுக்கு... அவனிடம் உள்ள வைரத்தை தனக்குக் கொடுக்குமாறும் அதற்குரிய விலையைக் கொடுத்து விடுவதாகவும் ஒரு கடிதம் எழுதி சேவகனிடம் கொடுத்து அனுப்பினார்.

ஆனால், மருதனிடம் உண்மையாக எந்த வைரமும் இல்லை. அதை அரசருக்குத் தெரியப்படுத்தவென ஒரு கடிதம் எழுதத் தொடங்கினான்.

''அரசே, என்னிடம் தாங்கள் கூறுவதுபோல் எந்த வைரமும் இல்லை. அப்படியே



இருந்தாலும்... என்று எழுதிக் கொண்டிருந்தபோது... வேறு வேலை ஒன்று வரவே மருதன் எழுந்து சென்றுவிட்டான்.

சென்ற மருதன் திரும்பிவர நேரமானதால், சேவகர்கள் அவன் முற்றுப்பெறாமல் எழுதியிருந்த கடிதத்தை எடுத்துக் கொண்டு அரசனிடம் விரைந்தனர். அரசர் அக்கடிதத்தைப் படித்து முற்றுப் பெறாத கடிதத்தில் என்ன எழுதியிருக்கக் கூடும் என அமைச்சரைக் கேட்டார். மருதன்மீது முன் பகை கொண்டிருந்த அமைச்சர் ''அரசே... அக்கடிதத்தில் 'என்னிடம் அப்படி எந்த வைரமும் இல்லை... அப்படியே இருந்தாலும் உங்களுக்கு அதைத் தர விரும்பவில்லை' என எழுதியிருப்பான் என்றான்.


உடனே, அரசர் மருதனை அழைத்து அக்கடிதம் பற்றிக் கோபமாகக் கேட்டார்.

அதற்கு மருதன், ''அரசே... வைரம் இருந்திருந்தாலும்கூட உங்களிடம் எந்த விலையும் எதிர்பாராது இலவசமாக கொடுத்திருப்பேன் என்றே எழுத நினைத்தேன் என்றான்.

அமைச்சரின் தீய எண்ணத்தால் மருதனைக் கோபப்பட்டோமே என அரசர் வருந்தினார்.

'நாமும் எந்த ஒரு விடயத்திலும் அவசரப்படாமல் நன்கு ஆலோசித்த பின்னரே, சரியான முடிவுகளை எடுக்க வேண்டும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2014, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**பெயர்:** எம்.பராஸ்.
**புள்ளிகள்:** 176.
பாடசாலை: மன்/ சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி.



**பெயர்:** தி.தீபத்.
**புள்ளிகள்:** 163.
பாடசாலை: யா/ மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்.,



**பெயர்:** டபிள்யூ.ஷஹீமா.
**புள்ளிகள்:** 173.
பாடசாலை: க/தெநு/ பாத்திமா பாலிகா மு.ம.வித்.,



**பெயர்:** எச்.ஸைனப்.
**புள்ளிகள்:** 169.
பாடசாலை: க/தெநு/ பாத்திமா பாலிகா மு.ம.வித்.,



**பெயர்:** த.மாதேஷ்.
**புள்ளிகள்:** 166.
பாடசாலை: மட்/ துறைநீலாவணை மகா வித்.,



**பெயர்:** எம்.அப்ராஸ்.
**புள்ளிகள்:** 161.
பாடசாலை: இர/அல்- அக்ஷா மு.ம.வித்.,
**பெற்றோர்:** பி.ஜவ்பர்-மஃகுமா.



**பெயர்:** பிரகாஸ் டில்ஷான்.
**புள்ளிகள்:** 164.
பாடசாலை: கமு/கார்மேல் பற்றிமா கல்லூரி.



**பெயர்:** எம்.கன்துல் ரஹ்னா.
**புள்ளிகள்:** 166.
பாடசாலை: க/தெநு/ பாத்திமா பாலிகா மு.ம.வித்.,



**பெயர்:** பஸ்ரி அஹமட்.
**புள்ளிகள்:** 171.
பாடசாலை: கு/அல்- இர்பான் மத்திய கல்லூரி.
**பெற்றோர்:** எம்.பாரிஸ்- எஃப்.ரிஸ்வானியா.



க/மீரா மத்திய கல்லூரியிலிருந்து சித்தியடைந்த மாணவர்களான (இ.வ) எஃப்.அம்னா (167 புள்ளிகள்), எஃப்.அவாசா (164 புள்ளிகள்), எஃப்.பஸ்னா (175 புள்ளிகள்), எஃப்.ஹரீசா (159 புள்ளிகள்), எம்.ரசாத் (163 புள்ளிகள்), பிலால் அஹ்மத் (190 புள்ளிகள்), அஸ்மார் அஹ்மத் (172 புள்ளிகள்), எம்.ரஹ்மி (174 புள்ளிகள்) ஆகியோர், பாடசாலை அதிபர் எம்.பஹாவுத்தீன் மற்றும் பொறுப்பாசிரியை எம்.ஹலீமா ஆகியோருடன் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இக்காலத்தின் பருவப்பெயர்ச்சியானது, மழைக்காலத்துடன் ஆரம்பிக்கும் காலப்பகுதியாகும். இது வெள்ளப்பெருக்கு, சூறாவளி, மண்சரிவு மற்றும் இடி மின்னல் தாக்குதல் நிறைந்த காலப் பகுதியாகும். இயற்கை அனர்த்தங்களை முன்னரே அறிந்து அதற்கேற்ப தயார்ப்படுத்தல்களை மேற்கொள்வதனூடாக, அனர்த்தப் பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள முடியும்.அந்தவகையில், எமது நாடு எதிர்நோக்கும் இயற்கை அனர்த்தங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.



# இயற்கை அனர்த்தங்கள் நிறைந்த கால









## வெள்ளப்பெருக்கு

வெள்ளப்பெருக்கு சில வழிமுறைகளில் ஏற்படலாம். அவையாவன;

**ஆறுகளினால்:** அதிக மழை வீழ்ச்சி காரணமாக, ஆறுகள் பெருக்கெடுத்து வெள்ளப் பெருக்கு ஏற்படலாம்.

**திடீர் வெள்ளப்பெருக்குகள்:** அதிக மழை காரணமாக, கரைகளில் சேரும் வெள்ளம் அதிக வேகத்துடன் பள்ளமான பகுதிகளை நோக்கிப் பாய்ந்து செல்லும். இதனால், கரையின் இரு மருங்கிலும் உள்ள சொத்துக்களுக்கு பாதிப்புகள் ஏற்படக்கூடும்.

**நகரப்பகுதி வெள்ளம்:** நீர் வழிந்து செல்லும் பாதைகளில் ஏற்படும் அடைப்புகளின் காரணமாக ஏற்படும் வெள்ளமாகும்.

## தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காலப்பகுதி

மே முதல் செப்டெம்பர் வரையிலான காலப்பகுதி தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் காலமாகும். கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, கொழும்பு,கம்பஹா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு அபாயம் காணப்படுகின்றது. நொவெம்பர் முதல் ஜனவரி வரையிலான பருவப் பெயர்ச்சி காலப்பகுதியின்போது அம்பாறை, திருகோணமலை, பதுளை, மொனராகலை, பொலன்னறுவை மற்றும் மாத்தளை மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது.

**மார்ச்-ஏப்ரல் மற்றும் ஒக்டோபர்-நொவெம்பர்:** பருவப் பெயர்ச்சிக் காலப்பகுதியின் போது இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் மழைவீழ்ச்சி உயர்வடைந்து வெள்ளப் பெருக்கு அனர்த்தம் ஏற்படுகின்றது.

**வெள்ளப்பெருக்கினால்...** வெள்ளப்பெருக்கினால் மக்கள் அதிகளவில் பாதிப்படைவதுடன், அவர்களது உடமைகளுக்கும் அதிகளவு பாதிப்பு ஏற்படுகின்றது. பயிர்ச்செய்கை நிலங்கள், கால்நடைகள் மற்றும் மக்களின் பொருளாதாரமும் இதனால் பாதிக்கப்படுகின்றது.

**வெள்ளப்பெருக்கிற்கான மனித காரணிகள்:** ஆற்றங்கரைகளில் குடியிருப்புகளை அமைத்தல், மலைப்பகுதிகளில் மரங்களை வெட்டி அழித்தல், திட்டமிடாத குடியிருப்புகளை அமைத்தல்.


**வெள்ளப்பெருக்கினை தடுப்பதற்கு:** மண்வேலிகளை அமைத்தல்,காடுகளை வளர்த்தல், கரைகளைப் பாதுகாத்தல், நீர் வழிந்தோடும் பகுதிகளை சுத்தமாக வைத்திருத்தல், மலைப்பகுதிகளில் மரங்களை அழிக்காதிருத்தல்.

**வெள்ளப்பெருக்கு அபாயமெனின்...** கல்விச் சான்றிதழ்கள், தங்க நகைகள், பணம், வங்கிக் கணக்குப் புத்தகங்கள், காணி உரிமைப் பத்திரங்கள் என்பனவற்றை ஒரு பையில் பாதுகாப்பாக இட்டுவையுங்கள். வீடுகளில் இருந்து வெளியேறும் போது அவற்றை எடுத்துச் செல்லுங்கள். வீடுகளில் உள்ள இலத்திரனியல் உபகரணங்களை உயரமான இடத்தில் பாதுகாப்பாக வைத்துவிடுங்கள். வெள்ள நீரில் இறங்கி விளையாடுவதைத் தவிருங்கள். நீச்சல் தெரியாவிட்டால், நீரில் அடித்துச் செல்பவர்களைக் காப்பாற்ற முயலாதீர்கள்.

## மின்னல் தாக்குதல்

பொதுவாக, காற்றில் மின்சாரம் ஊடுருவிப் பயணிக்காதபோதிலும் முகில்களில் ஏற்படும் உரசல் காரணமாக மின்சாரம் அவற்றைச் சூழ உருவாகின்றது. இந்த இலத்திரனியல் மீற்றருக்கு 3 மில்லியன் வோல்ட்டாக இருக்கும்போது காற்றில் மின்சாரம் பயணிக்கின்றது. இவ்வாறு முகில்களிலிருந்து தரையை நோக்கிவரும் மின்சாரத் தாக்கம் மின்னலாகும். மின்னல் தாக்குதல் காரணமாக, உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதிப்புகள் ஏற்படக்கூடும். மார்ச்-ஏப்ரல் மற்றும் ஒக்டோபர்-நொவெம்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி

ஆகிய பருவப்பெயர்ச்சி மழைக் காலத்தின்போது இலங்கையில் மின்னல் தாக்கம் அதிகமாகக் காணப்படும்.

**மின்னல் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு பெற...** மின்னல் வெளிச்சத்திற்கும் இடி முழக்கத்திற்கும் இடையிலான காலப்பகுதி 30 வினாடிகளுக்கும் குறைவெனின், துரிதமாக பாதுகாப்பான இடத்தினை நாடிச் செல்லுங்கள். 30 நிமிடங்கள் வரை பாதுகாப்பான இடத்தில் இருங்கள்.

விறகு வெட்டச் செல்லுதல், திறந்த வாகனங்களில் அதாவது மோட்டார் சைக்கிளில் பயணித்தல் உலோகக் கம்பிகள் இணைத்து கட்டப்பட்ட ஆடைகளை உலரவைக்கும் கயிறுகளின் அருகாமையில் நிற்றல் அல்லது தொடுதல், உயரமான மரங்களின்கீழ் நிற்றல், கூட்டமாக திறந்தவெளிகளில் இருப்பது போன்றவற்றை தவிர்த்தல் வேண்டும். ஆறுகள், வாவிகள், கிணறுகள் மற்றும் குளிக்கும் தடாகங்களில், குழாய்களில் குளிப்பதனைத் தவிர்த்துவிடுங்கள். தொலைக்காட்சி பார்ப்பதனைத் தவிர்த்துவிடுங்கள். வீட்டின் பிரதான மின் இணைப்புக்கு அருகாமையில் நிற்க வேண்டாம். கைத்தொலைபேசியை பாவிக்கக் கூடாது.











## சுனாமி

சமுத்திரத்தில் நிகழும் புவியதிர்ச்சியின் காரணமாக, சுனாமி ஏற்படக்கூடும். பூமித்தகடுகள் ஒன்றை ஒன்று உரசுவதனால் ஒன்று மற்றையதிலிருந்து விலகிச் செல்லும்போது வெளியிடும் சக்தியினால் பூமியதிர்ச்சி ஏற்படக் கூடும். இந்த பூமியதிர்வினால் கடல் அலைகள் உயரே எழக்கூடும். இதனால், சுனாமிப் பேரலைகள் உருவாகின்றன.

**சுனாமிக்கான எச்சரிக்கை:** சாதாரண பூமியதிர்ச்சியின்போது பாதிப்புகள் குறைவாக இருக்கின்றபோதிலும் தொடர்ச்சியான கடுமையான பூமியதிர்ச்சிகள் சுனாமியினை ஏற்படுத்தக்கூடும். சுனாமி ஏற்படும் முன்னர் தற்கமாக கடல் பின்வாங்கி உட்செல்லும். இது சுனாமி ஏற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஏற்படமாட்டாது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடலுக்கு அருகாமையில் செல்லல், மீன் பிடிக்கச் செல்லல் ஆபத்தானவை. உயரமான பகுதிகளை நோக்கி விரைவாக சென்றுவிடுங்கள்.

சர்வதேச நிறுவனம் சுனாமி ஆபத்தினை காலநிலை அவதான நிலையத்திற்கும் அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்திற்கும் அறிவிக்கும். சுனாமி தொடர்பான மேலதிக எச்சரிக்கைகளை வானொலி, தொலைக்காட்சி, சைரன் ஒலி, பொலிஸார் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக விடுப்பர். சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னர் முன்னரே இனம் காணப்பட்டிருக்கும் உயரமான இடத்தினை நோக்கி விரைவாகச் செல்லவேண்டும்.

## புயல் தாக்கம்

வெப்ப வலயத்திற்கு நன்கு வெப்பம் கிடைக்கின்றது. இதனால், நிலப்பகுதியும் வளிமண்டலமும் வெப்பமடைகின்றது.வெப்பக்காற்று வான் நோக்கி ஆவியாகச் செல்வதனால் குறைந்த தாழமுக்கம் ஏற்படுகின்றது. இதன்போது அதிக அமுக்தப் பகுதிகளில் இருந்து தாழ்ந்த பகுதிகளை நோக்கி காற்று வீசுகின்றது. இந்த தாழமுக்க நிலைமை பெரும் காற்றுடன் கூடிய மழையாக மாறுகின்றது. இதனால், கடும் காற்றும் மழையும், மின்னல் தாக்கமும் ஏற்படக்கூடும். இதனால், வெள்ள அனர்த்தம், கடல் பெருக்கெடுப்பு என்பனவும் ஏற்படக்கூடும்.

**புயல் தாக்கத்திலிருந்து பாதுகாப்புப் பெற:** புயல் ஏற்படும் என எச்சரிக்கைவிடப்பட்டால் வீட்டுக்கூரைகள் மற்றும் சுவர்கள் பலமானதாக இருக்கின்றதா? என்பதனை சரிபாருங்கள். வீட்டிற்கு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடும் உயரமான மரங்களின் கிளைகளை வெட்டிவிடுங்கள்.

**புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டால்...**

- சிறுபிள்ளைகளை வீடுகளுக்குள் பாதுகாப்பாக வைத்திருங்கள்.
- ஆடை அணிகலன்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க ஆபரணங்கள் ஆகியவற்றை பொலித்தீன் பைகளில் இட்டுப் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிடுங்கள்.
- மீன்பிடிப் படகுகளை நங்கூரம் இட்டு பாதுகாப்பாக நிறுத்திவையுங்கள். மீன்பிடி உபகரணங்களை உயரமான இடத்திற்கு கொண்டு செல்லுங்கள்.
- ஆடு மாடுகளின் கட்டுக்களை அவிழ்த்துவிடுங்கள்.

## சூறாவளி வீசக்கூடிய பகுதி

| பகுதி | அதிகபட்ச வேகம் | தாக்கம் |
|---|---|---|
| குறைந்த அமுத்தப் பகுதி | 35 இற்கு குறைவு | சில தாவரங்களுக்குப் பாதிப்பு |
| அமுத்த விகிதம் | 35-65 | வீடுகள், பயிர்கள் ஓரளவு பாதிப்பு |
| புயல் காற்று | 65-125 | வீடுகள் பாதிப்பு, மின்சாரத் துண்டிப்பு |
| சூறாவளிப்புயல் | 125 இற்கு அதிகம் | வீடுகளுக்கு பெரும் பாதிப்பு, கூடிய பகுதிகளில் மின் துண்டிப்பு |

-பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தமிழ்

பெயர்: ..........................................................

01) இப்பாடலை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

*உலகினிலே நடப்பதெல்லாம்*
*ஒன்று திரட்டி*
*நாம் வீட்டினுள் இருந்தபடியே*
*நல்ல பல செய்திகளையும்*
*உலகின் பல நிகழ்வுகளையும்*
*வீட்டினிலே காட்டி விடும்*
*விந்தையான பெட்டி இது*

1. இப்பாடல் எதைப் பற்றிக் கூறுகிறது?
   ..........................................................
2. 'செய்தி' என்பதன் ஒத்தகருத்துச் சொல் யாது?
   ..........................................................
3. விந்தையான பெட்டி எமக்கு எதைக் காட்டிவிடுகிறது?
   ..........................................................
4. இது எதனை ஒன்று திரட்டுகிறது?
   ..........................................................
5. 'நடப்பதெல்லாம்' என்பதை பிரித்து எழுதுக.
   ..........................................................
6. 'இது' என்பதன் எதிர்ப்பதம் யாது?
   ..........................................................

02) கருத்துள்ள வாக்கியமாக மாற்றி எழுதுக.

1. நாடு/சமுத்திரத்தின்/என அழைக்கப்படுகிறது/எங்கள்/ இந்து/ முத்து
   ..........................................................
2. என்னை/ அம்மா/ விளையாடப்/ விடுங்கள்/ போக
   ..........................................................

03) கீழுள்ள வினாக்களில் முதலாவது சொல்லுடன் தொடர்பற்ற சொல்லைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. கேத்தல்
   - தண்ணீர்
   - சுடுநீர்
   - வளைந்த பாத்திரம் ..........................................
   - சிறிய
   - வெள்ளை நிறம்

2. மரக்கறி
   - மலைநாடு
   - சத்துள்ளன
   - தோட்டம் ..........................................
   - அழகு
   - கரையோரம்

04) தரப்பட்டுள்ள நிகழ்வுக்குப் பொருத்தமான பழமொழியை தெரிவுசெய்க.

01. துன்பத்திற்கு மேல் துன்பம் வருதல்.
   1. கும்பிடப் போன கோயில் இடிந்து விழுந்தாற்போல.
   2. இரவு விழுந்த குழியில் பகல் விழுவதில்லை.
   3. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல.

02. மிகவும் மகிழ்ச்சிக்கு உள்ளாதல்.
   1. மனதில் பூப்பூத்தது போல.
   2. விகடகவி திருமணவீட்டிற்கு போனது போல.
   3. அமுதபிள்ளை பால் குடிப்பது போல.

05) அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் ஒன்றை அமைக்க.

- காட்டு
- கூரிய
- ஆயுதம்
- மிருகங்களை
- வேட்டையாடுவதற்கு
- உபயோகமாக
- மிகவும்
- இருந்தது

..........................................................
..........................................................
..........................................................

06) கீழே தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களுக்கான பொருளை எழுதுக.

1. தோள் கொடுத்தல் - ..........................................
2. காது குத்துதல் - ..........................................
3. பொடி வைத்துப் பேசுதல் - ..........................................

07) பிழையாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

1. கண் முளித்தான், எலுமிச்சம்பழம், ஆற்றில், கோர்வை.
2. தோல்வி, கோடரி, கண்திரத்தல், செலவு.
3. பின்னர், பெரிசு, புகையிலை, கூட்டில்.

**விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்**

## புலமைப்பரிசில் விடைகள்

(டிசம்பர் 10 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

### கணிதம்

| | | | |
|---|---|---|---|
| 01) | 1 | 11) | 1. 3 2. 3 3. 11 |
| 02) | 2 | 12) | 72km |
| 03) | 1 | 13) | ஜனவரி |
| 04) | 2 | 14) | 0.2, 0.5, 0.8, 1.1 |
| 05) | 3 | 15) | சுதன் |
| 06) | 2 | 16) | 12 நாட்கள் |
| 07) | 3 | 17) | 4 சமச்சீர் அச்சுக்கள் வரைந்திருக்க வேண்டும். |
| 08) | 2 | 18) | 111 வேளைகள் |
| 09) | 3 | 19) | ரூபா 8.00 |
| 10) | 2 | 20) | செவ்வகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடக பாடநெறி பாகம்-II பாடம் 31

# பத்திரிகை விளம்பரங்களில் ஒதுக்கப்படும் இடங்கள்!

Ears Space

பத்திரிகைகளில் விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு ஒதுக்கப்படும் இடங்கள் வெவ்வேறு அடையாளப் படுத்தல்களுடன் குறிப்பி டப்படுவதுண்டு. அவை குறித்து இவ்வாரம் பார்ப் போம்.

முன்பக்கத்தில் பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும்




இடத்திற்கு அருகே உள்ள இடப்பகுதியானது 'இயர்ஸ் ஸ்பேஸ்' (Ears Space) என்று அழைக்கப் படுகின்றது. உதாரணத்திற்கு வீரகேசரி

Classified Ads




பத்திரிகையை எடுத்துக் கொண்டால் 'வீரகேசரி' என்று பெயரிடப்பட்டுள்ள இடத்திற்கு இடப்புறமும் வலப்புறமும் இரண்டு கட்டமிடப்பட்ட விளம்ப ரங்கள் இருப்பதை கவனித்திருப்பீர்கள். இவைதான் 'இயர்ஸ் ஸ்பேஸ்' என்று குறிப்பிடப்படுகின்றது.

மேலும், முன்பக்கத்தின் அடிப் புறத்தில் குறைந்த உயரத்தில் அகலவாக்கிற்கு நீளமாக அமைக் கப்பட்டிருக்கும் விளம்பரமானது, 'கவர் ஸ்ட்ரிப்' (Cover Strip) என்று அழைக்கப் படும். சஞ்சிகை வடிவில் வெளிவருகின்ற பத்திரிகைகளில் முன் அட்டை யின் உட்புற மும் விளம்பரத் திற்கு சிறப்புப் பகுதிகளாகக் கருதப்படுகின் றன. இதற்க மைய, முன் அட்டையின் உட்புறமானது, இன்னர் கவர் (Inner Cover) எனவும், பின் அட்டையின் உட்புறம் பெக் இன்னர் (Back Inner) எனவும் குறிப்பிடப்படுகின்றது. இந்த பக்கங்களில் முழுப்பக்க அல்லது அரைப்பக்க விளம்பரங் களை பிரசுரிப்பதற்கு கூடிய கட்டணம் அறவிடப்படுவதுண்டு.

இவற்றிற்கு அடுத்தபடியாக நோக்கினால், பத்திரிகைகளில் எப்போதும் வலதுபுறம் அமை கின்ற பக்கங்களில் தமது விளம்ப ரங்கள் பிரசுரமாவதையே விளம்ப ரதாரர்கள் விரும்புவதுண்டு. ஏனென்றால், வாசகர் ஒருவர் பத்தி ரிகையின் பக்கங்களைப் புரட்டும் போது, எப்போதுமே அவரது பார்வை வலது புறத்தை அல்லது வலது கரையை நோக்கியே முதலில் செல்லும் என்றவோர் நம்பிக்கை நிலவுகின்றது. அத்றகமைய, குறிப் பிட்ட அந்தப் பகுதிகளில் விளம்ப ரங்களை பிரசுரித்தால் வாசகரின் பார்வை நேரே அந்த விளம்பரத்தின் மீதே பதியும் எனவும் கருதப்படு கின்றது. இதையும்விட, பத்திரிகை யின் 3 ஆம் பக்கமானது, இன்னும் சிறப்பிடத்தை வகிக்கின்றது. பத்தி ரிகையின் முதல் பக்கத்தை திருப்பி யவுடன், கண்ணுக்குப்படும் பக்க மாக இருப்பதனால் விளம்பரதாரர் கள் மிகவும் விரும்பும் பக்கமாக இது இருப்பதுண்டு. ஆகையால், 3 ஆம் பக்கத்தில் தமது விளம்பரங்களை பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள் கின்ற விளம்பர தாரர்களே அதிகம். இதன் காரணமாக, சில பத்திரிகைகள் குறித்த 3 ஆம் பக்கத்திற்கான விளம்பரத்திற்கு கூடிய கட்டணத்தை அறவிடுவதுமுண்டு.

கட்டமிடப்பட்ட விளம்பரங் களுக்கு அடுத்தபடியாக வரி விளம் பரங்களும் பத்திரிகை, சஞ்சிகை களில் இடம்பெறுவதுண்டு. வரி விளம்பரங்கள் Classified Ads என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப் படுவதுண்டு. கட்டமிடப்பட்ட விளம்பரங்களைவிட, வரி விளம்பரங்களுக்கு கட்டணம் குறைவாகவே அறவிடப்படும். இத்தனை சொற்களுக்கு இத்தனை ரூபாய் என்றே கட்டணம் சேர்க் கப்படும். ஆனால், கட்டமிடப் பட்ட ( Box) விளம்பரங்களில்

Ears Space

கட்டமிடப்பட்ட சதுரக் கட்டத்தின் உயரம், அகலம் ஆகியவற்றிற்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு ஏற்பவே கட்டணம் அறவிடப்படுவதுண்டு.

இதேவேளை, விளம்பரங்களில் என்னென்ன விடயங்கள், இடம்பெற்றுள்ளன, அவை பிரச்சினை களுக்குரிய விடயங் களாக உள்ளனவா? என்பதையும் நன்றாக



Box Ad

அவதானித்த பின்னரே, அந்த விளம்பரங்களை விளம்பரப் பிரிவினர் ஏற்றுக்கொள்வர். எப்போதுமே பத்திரிகைகள் தமது வாசகர்களுக்கு எந்தள விற்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றனவோ, அந்தள விற்கான முக்கியத்துவத்தை விளம்பரங்களுக்கும் கொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

(தொடரும்)

-ரிஷபன்

இரட்டிப்பு பரிசு... விஜய் - TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருளும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*03.12.2014* TOP News கேள்விக்கான விடை:

நைதரன்

Pen Drive வெற்றியாளர்:

ஈ.நிரூஷினி,
51/21, புதிய எல்லை வீதி,
சின்ன ஊறணி, மட்டக்களப்பு.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(17.12.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

இவ்வார கூப்பன்:
17.12.2014

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தொ.பே.இல:..............................

பாடசாலை:..............................

தரம்: ..............................

..............................
கையொப்பம்




# வைத்தியசாலைகளை அறிமுகப்படுத்தல்

எவ்வளவு சிறிய விகாரைகளாக இருந்தாலும் அன்று அங்கெல்லாம் சுதேச மொழிப் பாடசாலைகள் இருந்தன. எவ்வாறாயினும், ஆங்கிலேயரின் வருகையின்பின் ஆங்கில மொழியின் பெறுமதி அதிகரித்தது. எனினும், கத்தோலிக்க, பௌத்த, இந்து ஆகிய முத்தரப்பினருக்கும் ஆங்கில அறிவைப் பெறும் வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இதன் காரணமாக, மிஷனரி பாடசாலைகளில் கல்விகற்ற புரட்டஸ்தாந்து இலங்கையர்களுக்கு மாத்திரம் அதிகாரம் கிடைத்தது.

வைத்திய சிகிச்சைகள் ஆரம்பகாலத்தில் இராணுவத் திணைக்களத்தின் கீழேயே மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, இலங்கைக்கு ஆங்கிலேயர்கள் வந்தபின் தொற்று நோய்கள் வேகமாகப் பரவ ஆரம்பித்தன. அக்காலத்தில் ஆள்பதி நோர்த் கொழும்பு, திருகோணமலை, கண்டி மற்றும் காலி ஆகிய பிரதேசங்களில் தொற்றுநோய்த் தடுப்பு வைத்தியசாலைகளை நிறுவினார்.

கி.பி 1802 இல் கைத்தடுப்பூசி முறை ஆரம்பிக்கப்பட்டது. இதனால், இந்த நோயினால் இறப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தது. கி.பி 1802 ஆம் ஆண்டிலிருந்து 1812 ஆம் ஆண்டுக்கிடைப்பட்ட காலத்தில் 220,000 பேருக்கு கைத்தடுப்பூசி போடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா



தோட்டத்துக்கு
தேவையான
வளமான
மண்போல;
பூக்களுக்கு தேவையான
மணம் போல;
எம்மீது அன்பு காட்டும்
ஆசை அப்பா!

அன்னையைப் போல எம்மை
அரவணைக்கும் தந்தை;
குடும்பச் சுமைகளைத் தாங்கும்
கற்பக தருவும் அவரே!

குழந்தைகள் நாம் செய்யும்
குறும்புகளை
குழப்பமின்றியே சமளித்துக்கொள்வார்
எனது ஆசை அப்பா
அன்பு நிறைந்த இனிய அப்பா!

த.சர்மினி,
புதிய கற்பகபுரம், வவுனியா.

# குஞ்சு பொரிக்கும் ஆண் பிராணி



கடல்வாழ் உயிரினங்களில் ஆண் இனத்தில் இனப்பெருக்கம் செய்தல் என்ற சிறப்புத் தன்மையை பெற்றுள்ளவை கடற்குதிரைகளாகும். இவை மீன் இனத்தைச் சேர்ந்தவை. பெண் கடற்குதிரைகள், ஆண் கடற்குதிரைகளின் வால் பகுதியில் முட்டைகளை இடுகின்றன. இந்த முட்டையினை ஆண் கடற்குதிரைகள் ஆறு வாரங்கள் பாதுகாத்து குஞ்சுகளாகப் பொரிக்கின்றன. இந்தக் குஞ்சுகளும் சிறிது காலம் இவற்றின் பையிலேயே வளர்கின்றன.

உலகில் மொத்தம் 35 வகையான கடற்குதிரைகள் காணப்படுகின்றன. இந்தக் குதிரைகள் தன்னுடைய வாலை கடற்புற்களில் உரசிக்கொண்டு எழுந்து நிற்கக் கூடியவை.

எம்.எச்.ரிபாத் அஹமட், வாழைச்சேனை.

# உணவுகளில் அடங்கியுள்ள சத்துக்கள்



★ **காபோஹைதரேட் உணவுகள்**
சோளம், மரவள்ளி, உருளைக்கிழங்கு

★ **கொழுப்புணவுகள்**
தேங்காய், நிலக்கடலை, மரமுந்திரிகை

★ **விற்றமின் உணவுகள்**
பச்சை நிறக் கீரைகள், மரக்கறிகள், பப்பாசி

★ **புரத உணவுகள்**
சோயா அவரை, சிறகவரை, உளுந்து

★ **கனிப்பொருள் உணவுகள்**
முளைக்கீரை, பொன்னாங்கன்னி, கங்குன்

★ **சுவையூட்டிகள்**
மிளகாய், வெங்காயம், இஞ்சி

இ.ரிதுர்ஷன்,
கமு/கார்மேல் பற்றிமா தே.பாட.,
கல்முனை.

# பிரதேசங்களின் பழைய பெயர்கள்

| | |
|---|---|
| ஊர்காவற்றுறை | - ஊராத்தோட்டை |
| மன்னார் | - மகாதித்த |
| கண்டி | - செங்கடகல |
| பொலன்னறுவை | - பாசறை நகர் |
| திருகோணமலை | - கோகன்ன |
| யாழ்ப்பாணம் | - நாகதீப |
| அநுராதபுரம் | - அநுராதகம |
| கதிர்காமம் | - காஜரகம |
| தெவிநுவர | - தேவநகர |
| மிஹிந்தலை | - மிசாக பர்வத |
| யாப்பஹூவ | - சுப்பருவத |

எம்.ஜே.எஃப்.சம்லா,
இ/அல்-அக்ஷா மு.ம.வித்., எஹலியகொடை.

# உலகின் மிகப் பெரிய செல்வந்தர்



★ 2014 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகப்பெரிய செல்வந்தராக, மைக்ரோ சொப்ட் நிறுவன இணைய ஸ்தாபகர் பில்கேட்ஸ் கருதப்படுகின்றார்.

★ போர்ப்ஸ் சஞ்சிகையினால் வெளியிடப்பட்ட இத்தரப்படுத்தலில் இவரது தேறிய சொத்தின் பெறுமதி 76 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

★ இரண்டாம் இடத்தில் தென் அமெரிக்க தொலைத்தொடர்பாடல் ஜாம்பவான் கார்லெல்ஸிலிம் உள்ளார்.

எம்.நஜாத் ஜாவிட்,
அல்-அக்ஷா மு.ம.வித்.,
எஹலியகொட.




# முள்ளம்பன்றியும் ஓநாயும்



தனக்கு முன்னால் வந்து நின்ற ஓநாயை கோபமாகப் பார்த்து தன் முட்களைச் சிலிர்த்து நின்றது முள்ளம் பன்றி. ஓநாய் உடனே பதற்றத்துடன், "அவசரப்படாதே முள்ளம்பன்றி, உன் அழகை ரசிக்கத்தான் நான் வந்திருக்கிறேன்" என்றது.

"என்ன? நான் அழகா?" என்று வியப்புடன் கேட்டது முள்ளம் பன்றி.

"ஆமாம். நீ ரொம்ப அழகு. ஆனால், உன் உடம்பில் உள்ள முட்கள்தான் உன் அழகைக் கெடுக்கின்றன" என்றது ஓநாய்.

"ஆனால், அதுதானே என்னைப் பாதுகாக்கின்றது" என்றது முள்ளம் பன்றி.


"உண்மைதான் நீ முட்களை அகற்றிவிட்டால் இன்னும் அழகாக இருப்பாய். யாருக்கும் உன்னைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணமே வராது" என்றது ஓநாய். ஓநாயின் வார்த்தையில் மயங்கிய முள்ளம்பன்றி, தன் முட்களை எல்லாம் மழித்து விட்டு ஓநாய் முன் வந்து நின்றது.

"இப்போது நான் ரொம்பவும் அழகாக இருக்கிறேனா?" என்று கேட்டது. "அழகாய் மட்டும் இல்லை, நான் உன்னை அடித்துச் சாப்பிடுவதற்கு வசதியாகவும் இருக்கிறாய்" என்றபடி முள்ளம்பன்றிமேல் பாய்ந்து அதனைக் கொன்று தின்றது ஓநாய்.

'வீண் புகழ்ச்சிக்கு மயங்காதே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியில் இருந்து பல மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில், மணிக்கு கோடிக்கணக்கான கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் வால்நட்சத்திர மொன்றின்மீது சிறிய தளவூர்தியொன்றை தரையிறக்கி ஆய்வுகளைத் தொடர்வதில் விஞ்ஞானிகள் வெற்றி கண்டுள்ளனர். அண்மையில் வெற்றிகரமாக நிறைவேறிய இந்த நடவடிக்கையை, ஐரோப்பிய விண்வெளி நிறுவனமே மேற்கொண்டிருந்தது. இந்த விண்வெளி ஆய்வு நடவடிக்கை 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# வால்நட்சத்திரத்தில் ஆய்வுப்பணிகள் அ

## ரொசெட்டா விண்கலம்

2004 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் திகதி '67P/ Churyumov Gerasimenko' வால்நட்சத்திரத்தை நோக்கி ஏவப்பட்ட 'ரொசெட்டா' என்று பெயரிட்டுள்ள விண்கலம், நீண்ட பயணத்தின் பின்னர் இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி, குறித்த வால்நட்சத்திரத்தின் சுற்றுப்பாதையை அடைந்தது. ரொசெட்டா விண்கலத்தின் ஃபிலே தளவூர்தியானது,குறித்த வால்நட்சத்திரத்தில் தரையிறங்கியுள்ள நிலையில், அங்கு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

## 67P/Churyumov Gerasimenko வால்நட்சத்திரம்

முன்னாள் சோவியத் சமவுடமை குடியரசைச் சேர்ந்த Klim Ivanovych Churyumov மற்றும் Svetlana Ivanovna Gerasimenko ஆகியோரே 1969 ஆம் ஆண்டு இந்த வால்நட்சத்திரத்தை கண்டுபிடித்தனர். இது சுமார் 4 கிலோ மீற்றர் விட்டம் கொண்டது. தனது சுற்றுப்பாதையை ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம் 6.45 வருடங்களாகும். 67P/Churyumov Gerasimenko வால்நட்சத்திரத்தை '67P' என்றும் சுருக்கமாக அழைப்பர்.

## ஃபிலே தளவூர்தி

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் '67P' வால்நட்சத்திரத்தின் சுற்றுப்பாதைக்குள் பிரவேசித்த ரொசெட்டா


வால்நட்சத்திரத்தை நெருங்கும் ரொசெட்டா விண்கலம்


67P' வால்நட்சத்திரம்




## எதிர்பாராத சிக்கலுக்கு முகங்கொடுத்தல்

67P வால்நட்சத்திரத்தின் மேற்பரப்பில் கடந்த நொவெம்பர் மாதம் 12 ஆம் திகதி ஃபிலே தளவூர்தி தரையிறங்கியது என அறிவிக்கப்பட்டாலும், தரையிறங்கும்போது தளவூர்தி எதிர்பாராத சிக்கலுக்கு முகங்கொடுத்ததாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஃபிலே தளவூர்தியானது, ரொசெட்டா விண்கலத்திலிருந்து கழன்று 7 மணி நேரத்தின் பின்னர் வால்நட்சத்திரத்தின் மேற்பரப்பை நோக்கி வந்துகொண்டிருக்கும்போது குத்திட்டிகள் சரிவர இயங்காமையினால், அது தரையுடன் மோதுண்டு இரு தடவைகள் தூக்கி எறியப்பட்டது. இதன் காரணமாக வால்நட்சத்திரத்தில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட அஜில்கியா எனுமிடத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்திலேயே தளவூர்தி நிலைகொண்டது. எனினும், அவ்விடத்தில் போதிய சூரிய ஒளி கிடைக்காமையினால், ஃபிலேயின் 10 கருவிகளில் 8 கருவிகளே செயற்படுகின்றன.

விண்கலம், (
குறித்த வால்
ரொபோ தள
என்பது சிறி
கும். ஏற்கன
குறித்த வால்
டானது, 7 ம
தங்கள் முயற்
புவியில் உள்
எடுத்தன. இ
தில் இருந்து
சமிக்ஞை செ
நிமிடங்கள் எ

## பிர

ஃபிலே த
மேற்பரப்பில்
தனது ஆய்
இந்த வால்ந
பனிக்கட்டிக
நாள் முதலே
வருகின் ன
பிரபஞ்சத்தில்
புவியில் உ
கண்டுபிடிப்

ே
20
சூ
ப
ந
ஃ
ெ

குறித்த வால்நட்சத்தி
டுள்ள இடத்திலேயே
இந்த இடம்தான் தளவூ
மான இடமாகும் என்
னிக்கப்பட்டிருந்தது. '
ஃபிலே தளவூர்திக்கு
றது. ஃபிலே தளவூர்தி
மூலம் தேவையான ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்கலம், நொவெம்பர் மாதம் 12 ஆம் திகதி குறித்த வால்நட்சத்திரத்தின்மீது ஃபிலே எனும் ரொபோ தளவூர்தியை தரையிறக்கியது. 'ஃபிலே' என்பது சிறிய ஆய்வுகூடமொன்றைப் போன்றதாகும். ஏற்கனவே திட்டமிட்டபடி, இந்த தளவூர்தியை குறித்த வால்நட்சத்திரத்தில் தரையிறக்கும் செயற்பாடானது, 7 மணித்தியாலங்களாக நடைபெற்றது. தங்கள் முயற்சி வெற்றிபெற்றுவிட்டது என்பதை புவியில் உள்ள விஞ்ஞானிகள் அறிய 28 நிமிடங்கள் எடுத்தன. இதற்கு காரணம், ரொசெட்டா விண்கலத்தில் இருந்து இது தொடர்பாக அனுப்பப்பட்ட சமிக்ஞை செய்தி புவியை வந்தடைய 28 நிமிடங்கள் எடுத்தமை ஆகும்.

### பிரபஞ்சத்தின் ரகசியம்

ஃபிலே தளவூர்தி '67P' வால்நட்சத்திரத்தின் மேற்பரப்பில் தரையிறங்கியதை அடுத்து, அது தனது ஆய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இந்த வால்நட்சத்திரத்தில் உள்ள தூசுகள் மற்றும் பனிக்கட்டிகள் என்பன இந்த பிரபஞ்சம் தோன்றிய நாள் முதலே இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்து வருகின்றனர். ஆக, அவற்றை பரிசீலனை செய்து பிரபஞ்சத்தின் ரகசியங்களைக் கண்டறிவதும், புவியில் உயிரினங்கள் தோன்றிய விதத்தைக் கண்டுபிடிப்பதுமே இந்த நடவடிக்கையின் பிரதான

# ...ள் ஆரம்பம்...



நோக்கங்களாக உள்ளன. அத்துடன், 2015 ஆம் ஆண்டில் இந்த வால்நட்சத்திரம் சூரியனுக்கு மிக அருகில் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்பொழுது என்ன நடக்கும் என்பதைக்கூட அறிவதற்கு ஃபிலே ஆயத்தமாக இருக்கின்றதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

### அஜில்கியா

...றித்த வால்நட்சத்திரத்தில் 'அஜில்கியா' என பெயரிடப்பட்...ள இடத்திலேயே ஃபிலே தளவூர்தி தரையிறங்கியது. ...த இடம்தான் தளவூர்தி தரையிறங்குவதற்கான பொருத்த...ன இடமாகும் என்பது ஒரு தசாப்தத்திற்கு முன்பே தீர்மா...க்கப்பட்டிருந்தது. '67P' வால்நட்சத்திரத்தில் தரையிறங்கிய ...பிலே தளவூர்திக்கு சூரியனில் இருந்தே சக்தி கிடைக்கின்...து. ஃபிலே தளவூர்தியிலுள்ள சூரிய தகடுகள், சூரிய ஒளி...லம் தேவையான சக்தியை சேமித்துக்கொள்கின்றது.

-இரஞ்சித் ஜெயகர்







# மூளையிலிருந்து கிடைக்கும் சமிக்ஞைகளால் கட்டுப்படுத்தப்படும் 'CYCOPED' வாகனம்




'CYCOPED' எனும் பெயரில் அழைக்கப்படும் இந்த ஒற்றைச் சக்கர சிறிய ரக வாகனம், பர்மிங்ஹமைச் சேர்ந்த 24 வயதுடைய ப்ரீட்டம் சக்கரபோர்த்தி என்ற இளைஞரால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒற்றைச் சக்கர வாகனத்தின் விசேட தன்மை என்னவென்றால், ஓட்டுநரின் மூளையிலிருந்து கிடைக்கப்பெறும் சமிக்ஞைகளின்மூலம் இதன் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதாகும். இவ்வாறு வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட பாதுகாப்புக் கண்ணாடியொன்றை அணிய வேண்டும். ஓட்டுநரின் மூளையிலிருந்து கிடைக்கப்பெறும் சமிக்ஞைகள், விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள ஸ்மார்ட்ஃபோன் அப்ளிகேஷனுக்கு ப்ளூடுத் மூலமாக அனுப்பப்படுகின்றன. இதனூடாக பிறப்பிக்கப்படும் கட்டளைகளுக்கமையவே, வாகனத்தின் வேகம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

CYCOPED வாகனத்தில் மீள் மின்னேற்ற சாதனமொன்றும் பொருத்தப்பட்டுள்ளது. இந்த சாதனத்தை 4 மணித்தியாலங்களுக்கு மின்னேற்றினால், 28 கிலோமீற்றர் தூரத்திற்கு பயணிக்க முடியும். மூளையில் இருந்து கிடைக்கும் சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்வதனூடாகவும் மீள் மின்னேற்ற சாதனத்தினூடாகவும் இந்த வாகனத்தின் வேகத்தையும் இயக்கத்தையும் கட்டுப்படுத்தக்கூடியதாக இருப்பதனால், இதனை இயக்குவதற்கு சாவி தேவையில்லை. இந்த CYCOPED வாகனம் 25 கிலோகிராம் நிறையுடையது என்பதோடு, மணிக்கு 25 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்களில் படிந்திருக்கும் பெக்டீரியாக்களை விசாலப்படுத்திப் பார்ப்போம்...!



இங்குள்ள படங்களைப் பார்த்தமாத்திரத்தில், அவை அபூர்வ தாவர இனங்களாகவோ அல்லது கடற்தாவரங்களாகவோ அல்லது முருகைக்கற்களாகவோ இருக்கும் என நீங்கள் கருதலாம். ஆனால், அவை எதுவுமல்ல. மாறாக, எமது வாயினுள் இருக்கும் பற்களில் படர்ந்திருக்கும் பெக்டீரியா நுண்கிருமிகளே அவையாகும். இத்தகைய நுண்கிருமிகளை ஸ்கேனிங் இலத்திரனியல் நுணுக்குக்காட்டி மூலம் விசாலப்படுத்திப் பெறப்பட்ட படங்களையே இங்கு நீங்கள் காண்கிறீர்கள்.

## ஸ்கேனிங் இலத்திரனியல் நுணுக்குக்காட்டி

இந்த ஸ்கேனிங் இலத்திரனியல் நுணுக்குக்காட்டியூடாக (Scanning Electron Microscope- SEM) பற்காறை, சிதைவடைந்துவரும் பற்கள் மற்றும் பெக்டீரியா தாக்கத்தினால் பற்களில் ஏற்பட்டுள்ள சேதங்கள் என்பனவற்றை மிகவும் தெளிவாகவும் விசாலப்படுத்தியும் பார்க்கக்கூடியதாக உள்ளது.


மேலும், இந்தப் படங்களின்மூலம் பற்களில் சூத்தை ஏற்பட்டுள்ள பகுதிகள், பற்தொகுதியில் அழிந்துபோன பகுதிகள் மட்டுமல்லாமல், நீங்கள் பல் துலக்கும்பொழுது உங்கள் பற்தூரிகையில் ஒட்டிக்கொள்ளும் பெக்டீரியா வகைகளும் மிகத் தெளிவாகக் காட்டப்படுகின்றன. இங்குள்ள சில படங்களில் பற்களின் சில பகுதிகள் உங்கள் கவனத்திற்காக நிறந்தீட்டப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.




மஞ்சள் நிற பல்லின் மேல் படிந்துள்ள கோளவடிவ பெக்டீரியா வகையே இங்கு நீலநிறத்தில் காட்டப்படுகின்றது. இடைக்கிடையே செந்நிறத்தில் காணப்படுபவை பல்லில் ஒட்டியுள்ள சில செந்நிற செங்குருதிச் சிறுதுணிக்கைகள் ஆகும்.




இளம் நீல நிறத்தில் காணப்படும் பல்லொன்றில் படிந்துள்ள பற்காறையே மஞ்சள் நிறந்தீட்டிக் காட்டப்பட்டுள்ளது.



பல் ஒன்றின் குறுக்குவெட்டுத் தோற்றமே இது. இங்கு நீல நிறத்தில் காட்டப்பட்டிருப்பது எனாமலை உற்பத்தி செய்யும் செல் அடுக்காகும்.




பல்லொன்றின் மேற்பரப்பில் படிந்துள்ள பற்காறை தெளிவாகத் தெரியும் விதத்திலேயே இளஞ்சிவப்பு நிறம் தீட்டிக் காட்டப்பட்டுள்ளது.




மனிதனின் வாயினுள் பல் ஈறில் (முரசில்) பரவிக் காணப்படும் லட்சக்கணக்கான பெக்டீரியாக்கள்.



பாற்பல்லொன்றின் ஒரு பகுதி. பல்லின் அடிப்பாகம் கரைந்து போயுள்ளது. எஞ்சியிருப்பது மேற்பகுதியாகும்.




பற்களில் படியக்கூடிய பற்காறையை உருவாக்கும் ஒருவித பெக்டீரியாவின் விசாலப்படுத்தப்பட்ட தோற்றமே இது.



பற்களின் மேல் படியும் பற்காறையினை, பற்களை துலக்குவதன்மூலம் நீக்கிவிடலாம்.




விசாலப்படுத்திக் காட்டப்பட்டிருப்பது, நீங்கள் பல் துலக்கிய பின்னர் பற்தூரிகையின் ஒரு நாரில் படிந்துள்ள பற்காறை ஆகும்.



வேட்டைப்பல்லொன்றின் விசாலப்படுத்தப்பட்ட தோற்றமே இது.



பற்சூத்தை ஏற்படும்போது பல்லில் துளை ஒன்று உருவாகும் விதத்தை இப்படம் காட்டுகின்றது.



கல்சியம் பொஸ்பேற் படிகமானது, பற்களில் மீள் கனிம உற்பத்தி மூலம், அவற்றின் உறுதியைப் பேண வழிவகுக்கின்றது.

(-ர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கல்வியில் மந்தமான மாணவர்களும் ஆசிரியர் வழிகாட்டலும்

கல்வியானது, மனித வாழ்வில் எதிர்காலத்துடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. ஒளிமயமான எதிர்காலம் சிறந்த கல்வியிலே தங்கியிருக்கின்றது. ஆகவே,ஒவ்வொரு பாடசாலையும் மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்க வழிமுறை செய்யவேண்டும். ஒரு வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களும் சமமான கல்வித்தரம் கொண்டவர்களாகக் காணப்படுவதில்லை. கல்வி நடவடிக்கைகளில் திறமை குறைவான மாணவர்கள் 'மெல்லக் கற்போர்' அல்லது 'கல்வியில் பிற்போக்குடையவர்' எனப்படுவர்.

ஒரு மாணவன், அவனது வயதுக்குரிய பாட அடைவை அடையவில்லையாயின், அம்மாணவனை பிற்போக்குடையவனாக கருதலாம். இவ்வாறான மாணவர்கள் சாதாரண வகுப்பறைக் கற்பித்தல் முறைகள் மூலம் சீரான வளர்ச்சியை பெற்றுக்கொள்ள முடியாதளவுக்கு சாதாரண மாணவரிலிருந்து வேறுபட்டவர்கள்.



இவர்கள் தனிமையை விரும்புபவர்களாகவும், விரக்தியடைந்தவர்களாகவும் பாடசாலை கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் மீறுபவர்களாகவும், எதற்கும் பின்வாங்கும் தன்மை உடையவர்களாகவும், துணிவில்லாதவர்களாகவும், சூழலைப் பற்றி அறிவதில் ஆர்வமில்லாதவர்களாகவும், பாடங்களில் அக்கறையில்லாதவர்களாகவும், தமது வயதிற்கேற்ப உளவளர்ச்சியில்லாதவர்களாகவும் காணப்படுவார்கள்.

கல்வியில் பிற்போக்கான மாணவர்களுள் மந்தபுத்தியுள்ள மாணவர்களும் ஒரு வகையினராவர்.

இவ்வாறானவர்கள் புத்தகக் கல்வியிலே பின்தங்கிவிடுகின்றனர். பெற்றோரின் கல்வியறிவின்மை, போதிய போஷாக்கின்மை, பாதுகாப்பின்மை, குறைந்த பொருளாதாரம் போன்ற காரணிகளால் மந்த புத்தியுள்ளவர்கள் உருவாகின்றனர். மேலும் சமூக, பொருளாதார பிரச்சினைகளும் மாணவர்களின் பிற்போக்கான நிலைமைகளுக்கு காரணமாகின்றன.

மேலும், ஆசிரியர் பற்றாக்குறை, ஆசிரியர்களின் பொருத்தமற்ற கற்பித்தல் முறைகள், கற்பித்தல் சாதனங்கள் இன்மை, மாணவர்களின் கல்வியில் ஆசிரியர்களது போதிய அக்கறையின்மை, மாணவர்களை ஊக்கப்படுத்தாமை, மாணவர்கள் பற்றிய முழுமையான அறிவில்லாமல் கற்பித்தல், ஆசிரியருக்கு போதிய உளவியல் அறிவின்மை போன்றன மாணவர்கள் கல்வியில் பின்னடைவிற்கு மேலதிக காரணங்களாக அமைகின்றன.

கல்வியில் பின்தங்கிய மாணவர்கள் சமூக வளர்ச்சியும் ஆளுமை வளர்ச்சியும் பெற வேண்டுமாயின், அவர்கள் சாதாரண மாணவர்களுடன் சேர்ந்து பழகக்கூடிய வழமையான வகுப்பறை சூழலை ஆசிரியர் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அம் மாணவர் பற்றியும் அவர்களின் குடும்ப நிலை பற்றியும் ஆசிரியர் அறிவதோடு, அவை பற்றி பெற்றோருடன் கலந்துரையாடி பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரை பங்குகொள்ளச் செய்யவேண்டும்.

மாணவர்களின் பெயர்களைக் கூறி அழைத்தல், அவர்களிடம் சிறு சிறு பொறுப்புக்களை ஒப்படைத்தல், அம்மாணவர்களை பாராட்டுதல், பரிசில்களை வழங்கல் இதுபோன்ற நடவடிக்கைகள் அம் மாணவர்களை ஊக்கப்படுத்துவதாய் அமையும். நீண்ட நேரம் தொடர்ச்சியாக கற்பிக்காமல் வெவ்வேறு முறைகளில் அதாவது விளையாட்டு முறை, குழு முறை, செயல்முறை, பரிசோதனை முறை போன்ற முறைகளில் கற்பிப்பது பாடத்தில் உள்ள அலுப்பையும் வெறுப்பையும் குறைக்க உதவியாக இருக்கும்.

சமூகத்தினதும் நாட்டினதும் உயர்ச்சிக்காக தம்மையே அர்ப்பணித்து, மாணவர்களை சிறந்த ஆளுமையுடையவர்களாகவும் நற்பிரஜையாகவும் வருவதற்கு வழிகாட்டுவது சிறந்த ஆசிரியரது மகத்தான பணியாகும்.

எம்.ஜே.எப்.றிஸ்னியா.
கொழும்பு பல்கலைக்கழகம்

# நாளைய உலகம் உங்கள் கையிலே

## ஒழுக்கம் பேணுவோம்



மாணவர்களாகிய நீங்கள் எப்பொழுதும் ஒழுக்கமாக வாழவேண்டும். ஒழுக்கம் என்பது நல்ல பழக்கவழக்கங்கள் மூலமே வெளிப்படுகின்றது. இதற்கு உங்களது வெளித்தொடர்புகளும் அடித்தளமாகின்றன. இங்கு வெளித்தொடர்பு என்பது உங்கள் நட்பு முறைகளைக் குறிக்கின்றது.

நல்ல நட்புக்கான மிகச் சிறந்த கொடுப்பனவு மெல்லிய புன்சிரிப்பேயாகும். அன்பான பார்வை,கனிவான பேச்சு ஆகியவை அனைவரையும் வசீகரிக்கக்கூடியவை. புன்சிரிப்பின் அதிசிறப்பு என்னவென்றால், பிறருக்கு உங்கள் மீது மதிப்பும் மரியாதையும் அதிகமாக ஏற்படும் நிலையாகும். அதனால் அவசரத்திற்கு உதவக்கூடிய பல பேர் உங்களுக்குக் கிடைக்கலாம்.

இதற்கு மாறாக, எப்பொழுதும் முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டிருப்பவர் அனைவரது வெறுப்புக்கும் ஆளாகிவிடுவார். இவர்களுக்கு நண்பர்கள் என்று யாரும் இருக்க மாட்டார்கள். எனவே, மாணவர்களாகிய நீங்கள் எப்பொழுதும் புன்சிரிப்பை உங்கள் வாழ்வின் உயர்வுக்கு அடிப்படை மூலதனமாகக் கொள்ளுங்கள்.

## கனிவான பேச்சு

கனிவான பேச்சு என்றால் எவரோடும் உரத்து சப்தமிட்டுப் பேசக் கூடாது. விதண்டாவாதம் செய்யவும் கூடாது. இழிவுபடுத்தவோ, ஏளனம் செய்தலோ கூடாது. பணிவான நல்ல வார்த்தைகளையே பேசவேண்டும். ஆத்திரமூட்டப்பட்டாலும் நிதானமிழந்து பேசிவிடக்கூடாது. எதையும் சிந்தித்துப் பேசுதல் வேண்டும்.

மேலும், பெற்றோர், ஆசிரியர், பெரியோர்கள் அறிவுரை கூறினால் அடக்கத்தோடும் ஆர்வத்தோடும் கவனமாக செவிமடுக்கவேண்டும். யாரைப் பற்றியும் பிறரிடம் எதையும் கூறாமல் சம்பந்தப்பட்டவருடனேயே மனந்திறந்து பேசி இணக்கம் கண்டுகொள்ள வேண்டும். இடையூறுகளை சகித்துக் கொள்வதோடு, எந்தப் பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வு கண்டுகொள்ளவும் வேண்டும். அதற்கு சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு, மன்னிப்பு ஆகியவை இன்றியமையாத விடயங்களாகும். எனவே, உங்கள் பெறுமதிமிக்க வாழ்வை சீராக அமைப்பதாயின் நல்ல பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளுதலே மிகச்சிறந்த வழிமுறையாகும்.

-வாத்தி மாமா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் மாலாவுக்கும் கமலாவுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**කමලා: ආ..මාලා, ලස්සණ කුඩයක්. අලුත් එකක් ද?**
ஆ... மாலா, லஸ்ஸண குடயக். அலுத் எகக் த?
கமலா: **ஆ... மாலா, அழகான குடை. புதியதொன்றா?**

**මාලා: අලුත් එකක් තමයි. හැබැයි මගේ නෙවේ - අක්කගේ.**
அலுத் எகக் தமய். ஹெபெய் மகே நெவே-அக்ககே.
மாலா: **புதியதுதான். ஆனால், என்னுடையதில்லை. அக்காவுடையது.**

**හරිම වැස්ස නේද කමලා.**
ஹரிம வெஸ்ஸ நேத கமலா.
**சரியான மழைதானே கமலா.**

**කමලා: ඔව් මාලා. අද ළමයිනුත් අඩුයි. ගුරුවරුත් අඩුයි.**
ஒவ் மாலா. அத லமய்னுத் அடுய். குருவருத் அடுய்.
கமலா: **ஆம் மாலா. இன்று பிள்ளைகளும் குறைவு. ஆசிரியர்களும் குறைவு.**

**මාලා: අපේ ටීචරුත් ඇවිත් නැද්ද?**
அப்பே டீச்சருத் எவித் நெத்த?
மாலா: **எங்களுடைய டீச்சரும் வரவில்லையா?**

**කමලා: තවම ඇවිත් නැහැ.**
தவம எவித் நெஹெ.
கமலா: **இன்னும் விரவில்லை.**

**මාලා: අපි පන්තියට යමු කමලා. ඔයාට කුඩයක් නැද්ද?**
அப்பி பந்தியட்ட யமு கமலா. ஒயாட்ட குடயக் நெத்த?
மாலா: **நாங்கள் வகுப்புக்குப் போவோம் கமலா. உங்களுக்கு குடையொன்று இல்லையா?**

**කමලා: නැහැ මාලා. මම තාත්තාගේ කාර් එකෙ ආවේ.**
நெஹெ மாலா. மம தாத்தாகே கார் எகே ஆவே.
கமலா: **இல்லை மாலா. நான் அப்பாவின் காரில் வந்தேன்.**

**මාලා: ගෙදර යනකොටත් වැස්සොත් මගේ කුඩෙන්ම යමු.**
கெதர யனகொடத் வெஸ்ஸொத் மகே குடென்ம யமு.
மாலா: **வீட்டுக்குப் போகும்போதும் மழை பெய்தால் என்னுடைய குடையிலேயே போவோம்.**

**කමලා: ස්තූතියි මාලා.**
ஸ்தூதிய் மாலா.
கமலா: **நன்றி மாலா.**



## பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. මාලා, ................ කුඩයක්.
2. ටීචරුත් ඇවිත් ................
3. අපි ................ යමු.
4. ................ එකෙ ආවේ.




**Have to** எனும் வினைச்சொல்லுடன், ஏதாவதொரு மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்பட்ட உடன்பாடு வாக்கியங்களையும், அவற்றின் வினா வாக்கியங்களையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) You have to collect some donations.
நீ கொஞ்சம் நன்கொடைகள் சேகரிக்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஆ) Do you have to collect any donations?
நீ நன்கொடைகள் ஏதேனும் சேகரிக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

✱ **இதே வினா வாக்கியத்தைப் பின்வருமாறு வேறு விதமாகவும் எழுதலாம்.**

இ) Have you got to collect any donations?
நீ நன்கொடைகள் ஏதேனும் சேகரிக்க வேண்டியுள்ளதா?

✱ You have to collect.
நீ சேகரிக்க வேண்டியுள்ளது.

✱ Do you have to collect?
நீ சேகரிக்க வேண்டியுள்ளதா?

✱ Have you got to collect? (Interrogative)
நீ சேகரிக்க வேண்டியுள்ளதா? (வினா)

ஈ) We have to be in Kandy tomorrow.
நாங்கள் நாளை கண்டியில் இருக்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

உ) Do we have to be in Kandy tomorrow?
நாங்கள் நாளை கண்டியில் இருக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

ஊ) Have we got to be in Kandy tomorrow?
நாங்கள் நாளை கண்டியில் இருக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

✱ We have to be.
நாங்கள் இருக்க வேண்டியுள்ளது.

✱ Do we have to be?
நாங்கள் இருக்க வேண்டியுள்ளதா?

✱ Have we got to be? (Interrogative)
நாங்கள் இருக்க வேண்டியுள்ளதா? (வினா)

எ) They have to travel by train.
அவர்கள் ரயில் மூலம் பயணிக்க வேண்டியுள்ளது.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

ஏ) Do they have to travel by train?
அவர்கள் ரயில் மூலம்தான் பயணிக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

ஐ) Have they got to travel by train?
அவர்கள் ரயில் மூலம்தான் பயணிக்க வேண்டியுள்ளதா?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

✱ They have to travel.
அவர்கள் பயணிக்க வேண்டியுள்ளது.

✱ Do they have to travel?
அவர்கள் பயணிக்க வேண்டியுள்ளதா?

✱ Have they got to travel? (Interrogative)
அவர்கள் பயணிக்க வேண்டியுள்ளதா? (வினா)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்




* 'The Jazz Singer' என்பது உலகில் முதலாவது பேசும் படமாகும். இது எங்கு முதலில் வெளியாகியது? அதன் தயாரிப்பாளர் யார்?

ஐக்கிய அமெரிக்காவில், தயாரிப்பாளர் ஜெர்ரி லெய்டர்

* இலங்கையில் திறந்த பல்கலைக்கழகம் (Open University) எப்போது ஆரம்பிக்கப்பட்டது?



1978 இல்

* உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளில் இதுவரை ஆகக் கூடிய கோல்களை போட்டவர் என்ற சாதனையை நிலைநாட்டியவர் யார்?



ஜேர்மனியைச் சேர்ந்த மிரோஸ்லாவ் க்லோஸ், 16 கோல்கள்

* உலகில் முதலாவதாக வைத்தியத்துறையில் பட்டம் பெற்ற பெண் வைத்தியர் யார்?



எலிசபெத் ப்ளக்வெல்

* சீன பெருஞ்சுவரின் நீளம் என்ன?



13,170 மைல் தூரம்

* இலங்கை குடியரசு யாப்பு, இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசு யாப்பு, சோல்பரி யாப்பு எந்த ஆண்டுகளில் இலங்கையில் அமுலாக்கப்பட்டன?

1972, 1978, 1947 ஆம் ஆண்டுகளில்

* சார்க் நாடுகளின் அமைப்பு எப்போது ஆரம்பிக்கப்பட்டது?




1985 டிசம்பர் 8 ஆம் திகதி

* இலங்கையில் இதுவரை நடைபெற்றுள்ள மாநாடுகளில் எந்த மாநாட்டில் அதிகளவிலான உலகத்தலைவர்கள் கலந்துகொண்டனர்?

1976 இல் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டில்

* இலங்கையின் முதலாவது பெண் சட்டமா அதிபர் யார்?



சாந்தி ஈவா வனசுந்தர. 2011 இல் 26 ஆவது சட்டமா அதிபராக நியமனம் பெற்றார்

* உலகில் மிகப்பெரிய அகதிகள் முகாம் ஒன்று 2011 வரையில் இலங்கையில் இயங்கியது. அது எந்த முகாம்?



மெனிக்ஃபாம் அகதிகள் முகாம்

## விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5929
டி.டிதுஸ்ஷன், பூந்தோட்டம், வவுனியா.



அங். இல: 5930
ஐ.எம்.இஹ்லாஸ், ஆலிம் வீதி, கொழும்பு-07.



அங். இல: 5931
மஹ்தி முஸம்மில், பலகொல்ல, கெங்கல்ல.



அங். இல: 5932
வி.யதுஷன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



அங். இல: 5933
டி.பிரதீப், கோவில் வீதி, மட்டக்களப்பு.



அங். இல: 5934
எம்.சஜீர், முவர்ஸ் ஒழுங்கை, திஹாரிய.



அங். இல: 5935
உ.பா.ஸியாதா, பள்ளியடி வீதி, ஏறாவூர்-2^.



அங். இல: 5936
இ.ஜீவா, வி.வி.வீதி, கல்முனை-02.



அங். இல: 5937
ஏ.றிவ்வியன் றிட்சாட்சன், பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்.



அங். இல: 5938
பா.கவிஸ்கர் தேவா, கோகிலா வீதி, வெள்ளவத்தை.

# கசகஸ்தான்

உலகில் நிலத்தால் சூழப்பட்டுள்ள மிகப்பெரிய நாடுதான் கசகஸ்தான். 13 ஆம் நூற்றாண்டுப் பகுதியில் துருக்கி மற்றும் மொங்கோலிய கோத்திரத்தார்கள் இடம்பெயர்ந்து இங்கு வந்ததோடு, குடியேற்றங்கள் ஆரம்பமாகின. 18 ஆம் நூற்றாண்டில் இந்த நாடு ரஷ்ய பேரரசின்கீழ் வந்தது. அதன்பின் 1936 இல் ஐக்கிய சோவியத் சமவுடமைக் குடியரசின் ஒரு பகுதியாகியது. 1991 இல் கசகஸ்தான் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்தது.



கழுகின் உதவியுடன் வேட்டையாடும் பேர்குட் கோத்திரத்தார்




### தேசிய விலங்கும் மலரும்



பனிப்புலி தேசிய விலங்கு, ஸ்டெப் ஈகல் எனும் கழுகு தேசிய பறவை, லில்லி மலர் தேசிய மலராகும்.

### இனங்கள்




### மொழி

கசக் 64% (அரச கரும மொழி) ரஷ்ய மொழி 95% (உத்தியோகபூர்வ மொழி)

### சமயம்

இஸ்லாமியர் 70.2%, கிறிஸ்தவர் 26.2%, பௌத்தர் 0.1%, ஏனையோர் 0.2%, மதமற்றோர் 2.8%

### அரசியல்

நாடாளுமன்றக் கட்டடம்



ஜனாதிபதி நூர்சுல்தான் நஸர்பயெவ்

Kazakhstan 2050

2050 இல் பொருளாதாரத்தில் பலம் வாய்ந்த நாடாக மாற்றுவதே நோக்கமாகும்



### கசகஸ்தானின் இயற்கை வளம்

இயற்கை வாயு, பெற்றோலியம், நிலக்கரி, இரும்பு, மெங்கனீஸ், நிக்கல், கொபோல்ட், செம்பு, நாகம், மொலிபிடினம், சிங்க்.



பாரம்பரிய உடை



ஏரல் கடல்



பாரம்பரிய கைஸ் கூ போட்டி





பெருந்தொகையான சுரங்கங்கள்



இயற்கை எரிபொருள் மற்றும் இயற்கைவாயு வளம்






இதுவரை பயன்படுத்தப்படாத எண்ணெய் வளம்



நாணயம் டென்கே



பைகொனோர் ஏவுதளம் உலகின் முதலாவது பாரிய ரொக்கெட் ஏவும் சூழலைக் கொண்ட பிரதேசம்.



பாரம்பரிய டொம்ப்ரா இசைக்கருவி

பாரம்பரிய நடனம்



செம்பலாடின்க்ஸ் எனுமிடத்தில் அமைந்துள்ள சோவியத் ரஷ்ய அணு பரிசோதனை வலயம்.

கதிர்வீச்சால் தாக்கப்பட்டோர்





காய்கறி மற்றும் பழவகைகள் பயிர்ச் செய்கையுடன் கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன





இஸ்லாமிய பள்ளிவாசல்களும் ரஷ்ய நோர்த்தடெக்ஸ் கிறிஸ்தவ தேவாலயங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடந்தோறும் அல்லது சில மாதங்களுக்கு நீரினால் சூழப்பட்டிருக்கும் சூழல் தொகுதி 'ஈரநிலம்' என்று அழைக்கப்படுகின்றது. ஈரநில சூழல் தொகுதிக்கு உதாரணங்களாக களப்பு, ஆறு, வாவி, ஏரி போன்ற நீர்நிலைகளையும் வயல்நிலம், சதுப்பு நிலம் போன்ற ஈரளிப்பான நிலப்பகுதிகளையும் குறிப்பிடலாம்.


உலகெங்கிலும் காணப்படும் இத்தகைய ஈரநிலங்களில் சிலவற்றை சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களாக பிரகடனப்படுத்தி, அவற்றைப் பாதுகாக்கும் நோக்கில், 1971 ஆம் ஆண்டு ஈரானின் ரம்சார் நகரில் சர்வதேச உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த ஈரநிலங்களே 'ரம்சார் ஈரநிலங்கள்' எனப்படுகின்றன.

இலங்கையில் 6 இடங்கள் ரம்சார் ஈரநிலங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன: பூந்தல தேசிய வனப்பூங்கா, வில்பத்து சரணாலயம், ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி, மாது கங்கை, குமண சரணாலயம்,வங்காலை சரணாலயம் என்பனவாகும். அந்தவகையில், இலங்கையின் ரம்சார் ஈரநிலங்கள் சிலவற்றைப் பற்றி சுருக்கமாக அறிந்துகொள்வோம்.





# இலங்கையிலுள்ள ரம்சார் ஈரநிலங்கள்



## பூந்தல தேசிய வனப்பூங்கா

ரம்சார் ஈரநிலமாக பிரகடனப் படுத்தப்பட்ட இலங்கையின் முதலாவது ஈரநிலமாக 'பூந்தல தேசிய வனப்பூங்கா' (பூந்தல தேசிய வனவிலங்கியல் பூங்கா) திகழ்கின்றது. 1990, ஜூன் 15 ஆம் திகதி இது ரம்சார் ஈரநிலமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள இந்த வனப்பூங்கா; ஹம்பாந்தோட்டை, திஸ்ஸ, வெலிகந்த, கிரிந்த பாதையில் கிரிந்தி ஓயா முகத்துவாரம் வரையும், கிரிந்தி ஓயா முகத்துவாரப் பகுதியிலிருந்து ஹம்பாந்தோட்டை கரையோரப்பகுதி வரையும் சுமார் 6,216 ஹெக்டெயர் நிலப்பிரதேசத்திற்குப் பரவியுள்ளது.

அழகிய ஏரிகள் மற்றும் களப்புகளும் இங்கு அமைந்துள்ளன. பூந்தல வாவி, எம்பிலிகல களப்பு, மகாலேவாய, கொஹொலன்கல உப்பளம் என்பனவும் இவற்றுள் அடங்கும். இங்குள்ள அடர்ந்த காடுகளை தமது வாழ்விடமாக்கிக்கொண்ட உயிரினங்களில் இலங்கைக்கே உரிய 11 பறவையினங்கள், 32 மீன் இனங்கள், 15 ஈரூடகவாழிகள், 48 ஊர்வனங்கள், 52 பாலூட்டி இனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. தவிர, அவ்வப்போது பல சுற்றுலாப் பறவைகளும் மேலும் சில உள்நாட்டுப் பறவைகளும் இங்கு வந்துபோகின்றன.

(19ஆம் பக்கம் பார்க்க)

# உலக ஈரநில குறுக்கெழுத்துப் போட்டி

விஜய்

2015 பெப்ரவரி 02 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக ஈரநில தினத்தையொட்டி நடைபெறவுள்ள தேசிய வைபவத்திற்கு சமாந்தரமாக 'விஜய்' பத்திரிகையின் ஊடக அனுசரணையில், வனவிலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை இணைந்து உலக ஈரநில தின குறுக்கெழுத்துப் போட்டியை நடாத்துகின்றது.

### பரிசு விபரங்கள்

- ★ ஈரநில குறுக்கெழுத்துப் போட்டியிலிருந்து வாரம்தோறும் 10 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு, பெறுமதிவாய்ந்த புத்தகப் பொதிகள் பரிசாக வழங்கப்படும்.
- ★ தொடர்ந்து பிரசுரமாகவுள்ள மேற்படி போட்டியில் பங்குபற்றுகின்ற அனைத்துப் போட்டியாளர்களின் கூப்பன்களும் இறுதிக் குலுக்கல் போட்டிக்கு சேர்க்கப்படுவதுடன், அதிலிருந்து 15 பேர் தெரிவுசெய்யப்பட்டு (சகோதர 'விஜய' பத்திரிகையும் அடங்கலாக) பெறுமதியான பரிசுகள் வழங்கப்படும்.
- ★ இங்கிருக்கும் குறுக்கெழுத்துப் போட்டியை நிரப்பி, கீழுள்ள கூப்பனுடன் தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 24.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

ஈரநில குறுக்கெழுத்துப் போட்டி: 01
'விஜய்'
த.பெ.எண் - 2037, கொழும்பு.

### வில்பத்துவில் ஒருநாள் தங்கும் வாய்ப்பு

ஈரநில தேசிய வைபவங்கள் இம்முறை வில்பத்து சரணாலயப் பகுதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதுடன், வெற்றியாளர்கள் இந்நிகழ்வில் தமது குடும்பத்தினருடன் கலந்து கொள்வதற்கும் சரணாலயத்தில் ஒருநாள் இரவு தங்கியிருந்து, அதன் வனப்பை நேரில் சுற்றிப்பார்த்து மகிழவும் வாய்ப்பு வழங்கப்படும்.

கூப்பன்

பெயர்: ....................
முகவரி: ....................
....................
தொ.பே.இல: ....................
பாடசாலை: ....................
நகரம்: ....................

ஈரநில குறுக்கெழுத்துப் போட்டி இல.01

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ |
| | ■ | ரை | ■ | ■ | 3 |
| 4 | | ■ | ■ | 5 | ■ |
| | ■ | 6 | | | |
| 7 | | | ■ | | 8 |
| ■ | ■ | ப் | ■ | ■ | ள |

### மேலிருந்து கீழ்

1. இலங்கையின் ரம்சார் ஈரநிலங்களில் ஒன்று.
2. காடு மற்றும் வறண்ட பகுதிகளைப் போன்றே, ஈரநிலங்களிலும் வாழக்கூடிய பாம்பினமொன்று.
3. ஈரளிப்பான இடங்களில் அதிகம் காணக்கூடிய ஒரு பூச்சியினம்.
5. குளம், வயல் போன்ற இடங்களில் வாழக்கூடிய ஈரூடகவாழி.
6. உப்பளங்களில் உற்பத்தியாவது. (குழம்பியுள்ளது)
8. ஈரளிப்புத் தன்மை இருந்தாலும், பயிர்ச்செய்கைக்கு உதவாத நிலம். (குழம்பியுள்ளது)

### இடமிருந்து வலம்

1. ஈரநிலங்கள் இந்த தொழிற்துறைக்கும் பயனளிக்கிறது.
4. குளிர்காலங்களில் ஈரநிலப்பகுதிகளில் பொழியும்.
6. (வயல்) நிலத்தை உழுது, பயிர் செய்பவர்.
7. (தெங்குக் கைத்தொழிலில்) தேங்காய் மட்டைகளை நீரில் ஊற வைத்துப் பிரித்தெடுப்பது.
8. வயல்வெளிகள் உட்பட, ஏனைய நிலப்பகுதிகளில் பயிர்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது. (மாறியுள்ளது)

வாராந்தம் 10 பேருக்கு புத்தகப் பொதிகள்

15 பேருக்கு -[பெற்றோருடன்] வில்பத்து சரணாலயத்தை இரவு தங்கியிருந்து சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலுள்ள ரம்சார் ஈரநிலங்கள்

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)



## வில்பத்து சரணாலயம்

131,693 ஹெக்டெயர் நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ள வில்பத்து சரணாலயம், 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. அநுராதபுரத்திலிருந்து 30 கி.மீற்றர் தொலைவில் வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கு உட்பட்டு அமைந்துள்ள இந்த சரணாலயம்,தெற்கில் மோதரகம் ஆற்றையும் வடக்கில் கலா ஓயாவையும் மேற்கில் கடற்கரையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. உலர் வலயத்திற்குரிய சூழல் இயல்புகளையே இங்கு காணக்கூடியதாக உள்ளன. யானை, சிறுத்தை மற்றும் கரடி போன்ற பாலூட்டிகளையும் முதலை, பாம்புகள் போன்ற ஊர்வனங்களையும் பல்வேறு பறவையினங்களையும் இங்கு காணலாம். மார்ச், ஏப்ரல் மாதங்களில் இப்பகுதிக்கு அதிக மழை கிடைக்கும். அக்காலத்தில் இங்குள்ள ஏரிகள் மற்றும் குளங்கள் அதிக நீரைப் பெறுகின்றன.

## ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி

ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி (ஆனவிழுந்தாவ சரணாலயம்), புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 1,397 ஹெக்டெயர் நிலப்பரப்பு வரை பரந்துள்ள இப்பகுதி, 2001 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. பலதரப்பட்ட பறவைகள், 22 வகையான ஈரூடகவாழிகள், 237 வகையான பாலூட்டிகள் என்பனவற்றை இங்கு காணலாம். இலங்கையில் உள்ள நன்னீர் மீன் இனங்களில் 50 சதவீதமானவை ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதியில் வசிக்கின்றன. இவற்றைத் தவிர, நீரியல் தாவரங்கள், மூலிகைத் தாவரங்கள் மற்றும் இலங்கைக்கே உரிய தாவர வகைகள் உட்பட, சுமார் 264 தாவர வகைகள் இங்கு காணப்படுகின்றன. பல



வாவிகளை உள்ளடக்கியுள்ள ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதியூடாக, அப்பிரதேசத்திற்குட்பட்ட வயல்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. தவிர, அப்பிரதேசங்களில் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்தும் பிரதேசமாகவும் இந்த ஈரநிலம் முக்கியத்துவம் பெறுகின்றது.





'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 24.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.


நடராஜ் அறிவுக்கு விருந்து - 55
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=
பரிசுப் பொதி

**1** A படத்தை அவதானித்து, B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக




**2** நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னத்தில் தருக





## நடராஜ் அறிவுக்கு விருந்து - 53 விடைகள்

போட்டி: 02

போட்டி: 03




**3** உருக்களின் எண்ணிக்கைக்கமைய இணைக்க




## நடராஜ் அறிவுக்கு விருந்து - 53 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1ஆம் பரிசு
எஸ்.பஹாமா, பேருவளை.

2ஆம் பரிசு
க.சம்ரஷகன், மாவடிவேம்பு-02.

3ஆம் பரிசு
எம்.மிஃபால், கித்துலம்பிட்டிய.

பாராட்டுப் பெறுவோர்:

- கு.வேணுகா, வட்டுக்கோட்டை.
- எம்.ஷர்பாஸ், அநுராதபுரம்.
- எஃப்.சவீனா, கொழும்பு-12.
- வா.தனுஷாந், யாழ்ப்பாணம்.
- எஸ்.ஜஸீதா, சிலாபம்.
- எஃப்.நிஸ்ரா, பாணந்துறை.
- தே.கோபிகா, பேராதனை.
- அ.மஸீன், குருநாகல்.
- எஃப்.சியாதா, ஏறாவூர்-2A.
- சு.ஹர்சவர்தன், கொழும்பு-13.

நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

Sponsored by
NATARAJ®
Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு**

காத்தான்குடி றிதா சர்வதேச பாடசாலையின் 3 ஆவது பட்டமளிப்பு விழா, அண்மையில் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில், பாடசாலையின் செயலாளர் எம்.ஏ.எம்.சுல்மி தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும், பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வும் மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர். இதன்போது, இப்பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய சிறுவர்களுக்கு அதிதிகளினால் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டதோடு, சிறார்களின் ஆற்றல்களைப் பிரதிபலிக்கும் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(தகவல்: பழுலுல்லாஹ் பர்ஹான்)

ஹெம்மாதகம பள்ளிப்போருவையைச் சேர்ந்த ஸவாஹிர்-நிஸ்பா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஸஹ்ரி அஹமட், தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளை 14.12.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



ஹுனுப்பிட்டிமலுவ, ரம்புக்கனையைச் சேர்ந்த நியாஸ்-நவ்சா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் சிரான், தனது பதின்னான்காவது பிறந்ததினத்தை 22.12.2014 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த ஃபௌசான்- ஸகியா தம்பதியரின் புதல்விகளான ஃபாசத் ஆஃபியா-ஃபரீசத்ஹாஃபியா ஆகியோர் தமது இரண்டாவது பிறந்தநாளை 11.12.2014 அன்று கொண்டாடினர். இவர்களை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.






அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு




எஸ்.திருஜா,
கொ/விவேகானந்தாக் கல்.,
கொலன்னாவை.




எஃப்.முபஸ்ஸரா,
.../அஜ்மீர் தே.பா..,
உக்குவளை.



ப.யதுஷிகா,
யா/சாவகச்சேரி ஆ.பாட.,
சாவகச்சேரி.



எஃப்.சுஜா,
கரைத்தீவு மு.ம.வித்.,புத்தளம்.



எம்.முஹம்மத்,
க/றணபிம றோயல் கல்., பேராதனை.



எம்.கிம்சன்,
மேர்சி கல்வி வளாகம், மதுரங்குளி.



பா.அபிதரன்,
மன்/ஆண்டான்குளம்
ஆர்.சி.ரி.எம்.எஃப்., மன்னார்.

# இனிமைமிகு நாட்டார் பாடல்கள்



உள்ளத்து உணர்வுகளை இயல்பாகவும் இனிமையாகவும் வெளிப்படுத்துபவையாக நாட்டார் பாடல்கள் திகழ்கின்றன. உழைத்துக் களைத்த கிராமிய பாமர மக்களின் களைப்பைப் போக்கும் இனிய, நயமான இசையாகவும் நாட்டார் பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடல்கள் கிராமிய விழாக்களின்போதும் களியாட்டங்களின்போதும் அதிகமாக இசைக்கப்படுவதால், இவை கிராமியப் பாடல்கள் அல்லது கிராமிய இசை என்றும் அழைக்கப்படுகின்றன.

நாட்டார் பாடல் வரிசையில் அரிவு வெட்டும் பாடல்கள், கரையோரப் பாடல்கள் அல்லது மீனவர் பாடல்கள், மருத்துவிச்சி பாடல்கள், கொழுந்து பறிக்கும் பாடல்கள், ஒப்பாரிப்பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் என்பன அடங்குகின்றன.

தற்போது மாறிவரும் சமூக, கலாசார வாழ்வியல் மாற்றங்களும் நாகரிக வளர்ச்சியும் நாட்டார் பாடல் வளர்ச்சியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. நாட்டார் பாடல்களின் இனிமைகளையும் இசை நயத்தையும் இளம் சமுதாயத்தினர் சரிவர அறிய முடியாத நிலையே தற்போது ஏற்பட்டுள்ளது.




கிராமப்புறங்களில் இயல்பாகவே இசைக்கப்படும் நிகழ்வுகள் மறைந்து தற்போது ஏட்டுக்கல்வியாகவே நாட்டார் பாடல்களையும் அதன் சிறப்புத்தன்மைகளையும் அறியும் நிலை ஏற்பட்டுள்ளது. பாரம்பரிய விவசாய முறைமை மற்றும் தனித்துவம் வாய்ந்த கிராமிய நிகழ்வுகள் அருகி வருவதும் திரையிசை மற்றும் மேற்கத்தேய இசைகளின் ஆதிக்கமும் நாட்டார் பாடல் இசையின் பின்னடைவுகளுக்கு முக்கிய காரணங்களாகத் திகழ்கின்றன. இத்தகைய இனிய நாட்டார் பாடல்கள் மற்றும் அதன் தனித்துவம் என்பன அழிந்துவிடாமல் பாதுகாப்பது காலத்தின் தேவையாகவே கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம் வரைவோம்

## கிளி ஒன்றை வரைவோம்




# வீதி மைல்கல்லிலுள்ள நிறங்களின் அர்த்தங்கள்








வீதியின் எல்லைப்பகுதிகளில் இடைவெளி விட்டு சராசரி தூரத்தில் வெள்ளைநிறக் கல் பதிக்கப்பட்டிருப்பதைக் கண்டிருப்பீர்கள். அதனை மைல்கல் என்று கூறுவர். இந்த மைல்கற்கள் வீதி நெடுகிலும் குறிப்புப் புள்ளிகள் மற்றும் தூர அளவை வழங்க வென கட்டமைக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த மைல்கற்கள் தூரத்தை மட்டுமன்றி, அதிலுள்ள நிறங்களைக் கொண்டு எந்த வீதி என்பதையும் அறிந்துகொள்ளலாம். அது பற்றிய விபரங்கள் இதோ, உங்களுக்காக...

* மைல்கல் மஞ்சள் மற்றும் வெள்ளை நிறத்தில் அமைந்திருந்தால் அது தேசிய நெடுஞ்சாலையாகும்.
* பச்சை மற்றும் வெள்ளை நிறத்தில் அமைந்திருந்தால், அது மாகாண நெடுஞ்சாலையாகும்.
* நீலம் மற்றும் வெள்ளை நிறத்தில் இருந்தால், அது மாவட்ட வீதியாகும்.
* இளஞ்சிவப்பு அல்லது கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் காணப்படுமாயின், அது ஊரக வீதியாகும்.

# பழங்கள் பழுப்பதும் பூக்கள் உதிர்வதும் ஏன்?



வாயுநிலையில் உள்ள தாவர ஊக்கியான எத்திலீன் பழங்களைப் பழுக்கச்செய்வதுடன், பூக்கள் உதிரவும் காரணமாகின்றது. அத்துடன், பழங்கள் மற்றும் பூக்களின் ஆயுளையும் விரைவுபடுத்துகின்றது. இந்த எத்திலீன் வாயு தாவர செல்களில் அதற்கான தூண்டுதல்களை ஏற்படுத்துவதுடன், தாவரங்களின் வாழ்க்கைப் பயணம் முழுவதும் உடன் செல்கிறது. தாவர நாற்றுகளின் ஒளிநாட்டம், புவிநாட்டம், வேர்நாட்டம் பண்புகளுக்கும் எத்திலீன் காரணமாக அமைகின்றது.




பழக்கூடை ஒன்றில் ஓர் அழுகிய பழத்திலிருந்து வெளிப்படும் எத்திலீன் வாயு அருகில் உள்ள பழங்கள் பழுதடைவதை விரைவுபடுத்துகிறது. இதனால்தான் பழங்களையும் பூக்களையும் விற்பவர்கள் அன்றாடம் தரம்பிரித்து அழுகிப்போனவற்றை அகற்றிவிடுகின்றனர்.

# Guarantee Warranty என்றால் என்ன?






Guarantee என்றால் உத்தரவாதம் என்று பொருள்படுகிறது. நாம் வாங்கிய பொருளுக்கு உற்பத்தியாளர் அல்லது சேவை வழங்குனர் உத்தரவாதம் அளிப்பதாகும். அதாவது, ஒரு பொருளை வாங்கியதன்பின்னர் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அந்த பொருள் சரியான முறையில் செயற்படாவிட்டால், வாங்கிய பொருளுக்கு Guarantee இருந்தால் அந்த பொருளுக்கு மாற்றீடாக இன்னொரு பொருள் கொடுக்கப்படும்.












Warranty என்பது கிட்டத்தட்ட அதே அர்த்தத்தைக் குறித்தாலும் அது பொருளை மாற்றிக் கொடுப்பதல்ல. Warranty இருந்தால் வாங்கிய அதே பொருள் பழுது பார்த்து சரிசெய்து மீண்டும் பாவனையாளரிடம் வழங்கப்படும். இதுவே Guarantee மற்றும் Warranty யின் வித்தியாசமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விஜய் சாரணர் உலகம்


# பாசறை பயணத்தில் பயன்படக்கூடிய குறியீடுகள்


சாரணர்கள் தமது பாசறைப் பயணத்தின்போது, அடிக்கடி பயன்படுத்தக்கூடிய அடையாளக் குறியீடுகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அந்தவகையில், அம்புக்குறியீடு சுட்டிக் காட்டும் பாதையில் பயணிப்பது இலகு என்பதனை நீங்கள் அறிவீர்கள். இதனை சாரணர் அல்லாத எவராலும் பின்பற்ற இயலும்.

ஆனால், சாரணர்களாகிய நீங்கள் புதிய பல விடயங்களை அறிந்துகொள்ள வேண்டும். காடுகளில் ஆய்வுகளை மேற்கொள்ளும் சாரணர்கள் பயன்படுத்தக் கூடிய பாதை குறியீடுகள் பல உள்ளன. அதற்கமைய, இங்கு தரப்பட்டுள்ள படக்குறிப்புகளை நன்கு அவதானியுங்கள்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காட்டுப்பாதை அடையாளங்களை நடைபயணங்களின்போதும் காடுகளில் சுற்றுப்பயணத்தின்போதும் மட்டுமன்றி, நடைபயணம் சிக்கலாகும்போது பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். இக்குறியீடுகளின் எண்ணிக்கையும் அதிகமாகும். இதனால், சாரணர்கள் மிகவும் அவதானத்துடனும் பொறுமையுடனும் நடைபயணங்களை திட்டமிடல் வேண்டும்.











இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளில் சாரணர்கள் அடிக்கடி பயன்படுத்துகின்ற மேற்கூறப்பட்டுள்ள குறியீடுகளை, எந்தவொரு நாட்டு சாரணர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



## சாரணர் இயக்கத்தில் செவ்விந்தியர்களின் அடையாளம்

செவ்விந்தியர்களுக்கும் சாரணர் இயக்கத்தின் தந்தை பேடன் பவலுக்கும் இடையிலான தொடர்புகள் மிகவும் ஆழமானதாகக் காணப்பட்டது. செவ்விந்தியர்களிடம் கற்றுக்கொண்ட குறியீடுகள் சாரணர் இயக்கத்துடன் இணைக்கப்பட்டன. கீழே உள்ள குறியீடுகள் அவற்றுள் சிலவாகும்.




## ஹிப்பி அடையாளத்தினை வரைந்துகொள்வோம்




சாரணர்கள் ஊன்றுகோல் ஒன்றினை எப்பொழுதும் பயன்படுத்துவர். அந்த சாரணர் ஊன்றுகோலினைப் பயன்படுத்தி மேற்கூறப்பட்டவாறு பாதைகளை அடையாளப்படுத்த முடியும்.

நாட்டுக்கு நாடு சஞ்சரிக்கும் 'ஹிப்பி' கலாசாரத்தினைப் பாதுகாக்கும் ஒரு தரப்பினர் உள்ளனர். அவர்கள் பயன்படுத்தும் சமிக்ஞை தொகுதிகளை சாரணர்கள் பெற்றுள்ளனர். இந்த குறியீடுகளை 'Gypsy Signs' என்பர்.



எமது பயணப்பாதை மிக நீண்டது.



சிறிது தூரமே செல்லவேண்டும். பயண முடிவு நெருங்கிவிட்டது.



முன்னோக்கிச் செல்க. சரியான பாதையில் செல்கின்றீர்கள்.



முன்னால் தென்படும் சந்தியில் வலது புறம் திரும்பவும்.

## சாரணருக்கு ஒரு விளையாட்டு

செவ்விந்தியர்கள் தமது மாதத்தினைக் குறிக்கும் குறியீடுகள் மிகவும் சிறப்பானவை. அரைச்சந்திரனுடன் மற்றுமொரு குறியீட்டினைச் சேர்த்து மாதத்தினைக் குறிக்கின்றனர். சாரணர்களின் ஞாபக சக்தியினை அதிகரிக்கப் பொருத்தமான ஒரு விளையாட்டாக 'மாத இனங் காணலை'க் குறிப்பிடமுடியும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**1859**
இமானுவேல் நொபெலும் அவரது மனைவியும் மீண்டும் சுவீடனுக்கு வரத் தீர்மானித்தனர். அல்ஃப்ரட் மற்றும் அவரது இரு சகோதரர்களும் தந்தையின் கைத்தொழிலை தொடர்ந்து நடாத்திச் செல்வதெனத் தீர்மானித்தனர்.



அல்ஃப்ரட் நொபெலின் முதலாவது இரசாயன விஞ்ஞான ஆசிரியரான நிக்கோலாய் சினின், நைட்ரோக்ளிசரின் குறித்து தெளிவுபடுத்தினார்.







**1862**
நைட்ரோக்ளிசரின் குறித்து தனது ஆய்வு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டார்.



மீண்டும் ரஷ்யாவுக்கு வந்த அல்ஃப்ரட் நொபெல் தமது சகோதரர்களுடன் இணைந்து தந்தையின் தொழிற்சாலையில் பணிபுரிந்தார்.





**1863**
சுரங்கக் கைத்தொழிலுக்காக பயன்படுத்தப்படும் வெடி மருந்தான நைட்ரோக்ளிசரின் மற்றும் அதனுடன் தொடர்புடைய முதலாவது காப்புரிமையை பெற்றுக்கொண்டார். அத்துடன், டெடொனேட்டர் (blasting cap) சம்பந்தமாகவும் காப்புரிமையை பெற்றுக் கொண்டார்.

**1864** சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் நைட்ரோக்ளிசரின் குறித்து மென்மேலும் ஆய்வுகளை மேற்கொண்டார். அதேநேரம் சகோதரர்களுடன் இணைந்து வெடி பொருள் தயாரிப்பு நிறுவனம் ஒன்றையும் ஆரம்பித்தார்.



தொழிற்சாலையினுள் நிகழ்ந்த திடீர் வெடிப்பின் காரணமாக அல்ஃப்ரட் நொபெல் அவர்களின் இளைய சகோதரரான எமில் நொபெலுடன் மேலும் ஐவர் மரணமடைந்தனர்.

எமில் நொபெல்



**1853-1856**
க்ரிமியன் யுத்தம் ஆரம்பித்ததோடு, இமானுவேல் நொபெலின் குண்டு தயாரிக்கும் நிறுவனம் அதிக லாபமடைந்தது. எனினும், ரஷ்ய இராணுவம் தோல்வியடைந்ததும் ஆயுதக் கொள்வனவு இரத்துச் செய்யப்பட்டமையால் வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது.



அல்ஃப்ரட் நொபெலின் பயணப் பொதி.

# (1833-1896)

**1864-65**
நகரத்திலிருந்த தனது கைத்தொழிற்சாலையை நீக்கிவிட்டு, நதிக்கு மத்தியில் கப்பலில் இருந்துகொண்டு தனது வியாபாரத்தைக் கொண்டு நடத்தினர்.


**1865**
ஜேர்மனியின் ஹெம்பர்க் நகரில் Alfred Nobel co Factory ஐ நிறுவினார். ஒரு வருடத்தின் பின்னர் அத்தொழிற்சாலை வெடித்துச் சிதறியது. அதன்பின் மிகவும் பாதுகாப்புடன் நைட்ரோக்ளிசரினை பயன்படுத்துவது குறித்து ஆய்வுசெய்தார்.



தியோஃபைல் ஜூல்ஸ் பெலொயுஸ் (1807-1867)



இலக்கியத்திலும் காவியங்களிலும் அதிக விருப்பம் கொண்டவர்.






**1850**
இரசாயன விஞ்ஞானியான நிக்கொலாய் சினினுடன் தொழிலை ஆரம்பித்தார். மென்மேலும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரான்ஸ் நோக்கிப் பயணமானார்.

**1851**
இரசாயன விஞ்ஞானம் குறித்து கற்பதற்காக அமெரிக்காவிற்குச் சென்றார்.

**1867**
வெடிபொருள் ஒன்றை புதிதாக உருவாக்கினார். அதற்கு அவர் 'டைனமைட்' என பெயர் வைத்து அதற்குரிய காப்புரிமையையும் பெற்றார்.




**1871**
தனது பிரித்தானிய டைனமைட் நிறுவனத்தை ஸ்கொட்லாந்தில் ஆரம்பித்தார். பின்னர் 'நொபெல் எக்ஸ்ப்லோசிவ்' நிறுவனம் என அதன் பெயரை மாற்றினார்.

பெருமளவு பணத்தை சம்பாதித்த அல்ஃப்ரட் நொபெல் பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகளில் பெரும் சொத்துக்களுக்கு உரிமையாளரானார்.





**1842**
அல்ஃப்ரட் தனது சகோதரர்கள் மற்றும் தாயுடன் ரஷ்யாவின் புனித பீட்டர்ஸ்பர்க்கிலுள்ள தந்தையிடம் சென்றார்.

**1841-42**
அல்ஃப்ரட் நொபெல் தனது சிறுபராயத்தில் சென்ற பாடசாலையான ஸ்டொக்ஹோமிலுள்ள ஜெக்கோபஸ் அப்போலொஜிஸ்டிக் பாடசாலையில் சேர்ந்தார்.

**1837**
இமானுவேல் நொபெல் தனது குடும்பத்தை சுவீடனில் விட்டுவிட்டு முதலில் பின்லாந்திற்கும் பின்னர் ரஷ்யாவின் புனித பீட்டர்ஸ்பர்க் நகரிற்கும் சென்றார்.

அங்கு அவர் இயந்திர உபகரணங்களையும் வெடி மருந்துகளையும் தயாரித்தார். 'டோபிடோ' கடல் வெடி குண்டு உற்பத்தியிலும் ஈடுபட்டார்.

**1895**
பௌதீக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், மருத்துவ விஞ்ஞானம், இலக்கியம் மற்றும் சமாதானம் ஆகிய ஐந்து துறைகளில் சாதனை படைப்பவர்களுக்கு தனது செல்வத்தில் இருந்து பரிசுகள் வழங்கப்பட வேண்டும் என்ற மூன்றாவதும் இறுதியுமான தனது விருப்பத்தில் அல்ஃப்ரட் நொபெல் கையெழுத்திட்டார்.

**1896**
டிசம்பர் 10 ஆம் திகதி இத்தாலியின் சென் ரெமோ எனும் இடத்தில் காலமானார்.





**1833**
**ஒக் 21**
சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் பிறந்தார். தந்தையின் பெயர் இம்மானுவேல் நொபெல். தாயின் பெயர் கெரோலினா.

# நொபெல் பரிசின் மூலகர்த்தா
# அல்ஃப்ரட் நொபெல்




தந்தையான இமானுவேல் நொபெல் ஒரு பொறியியலாளர்.

இமானுவேல் நொபெல் (1801-1872)


சுவீடன் நாட்டைச் சேர்ந்த அல்ஃப்ரட் நொபெல் அவர்கள், ஒரு விஞ்ஞானியாக, நவீன உற்பத்தியாளராக, ஒரு வர்த்தகராக உலகப் புகழ்பெற்றவர். அல்ஃப்ரட் இரசாயன விஞ்ஞானத்தில் பிரகாசிக்க வேண்டும் என்பதே தந்தையின் நோக்கமாக இருந்தது. எனினும், அவரது ஆர்வமோ கலைத்துறையிலும் இலக்கியத்துறையிலுமே மேலோங்கி இருந்தது. உலகை அழிக்கும் வெடிபொருட்களை அறிமுகப்படுத்தி அதன்மூலமே பெரும் செல்வந்தராகப் பரிணமித்த அல்ஃப்ரட் தனது பெயர் அழிவினால் அல்ல, உன்னத செயற்பாடுகளின் மூலமே நிலைக்கவேண்டும் என பிற்காலத்தில் எண்ணினார். அதன் விளைவாகவே 'நொபெல் பரிசுத்திட்டம்' உருவாகியது.

* நொபெல் பரிசு வழங்கும் திட்டத்தின் ஆரம்பம் - 1901
* இதுவரை வழங்கப்பட்ட பரிசுகளின் தொகை - 567




* முதலாவது உலக யுத்தம் (1914-1918) மற்றும் இரண்டாம் உலக யுத்தம் (1939-1945) நடைபெற்ற காலகட்டங்களில் நொபெல் பரிசு வழங்கப்படவில்லை.

இதுவரை 50 சந்தர்ப்பங்களில் நொபெல் பரிசு வழங்கப்படவில்லை.




அல்ஃப்ரட் நொபெலுக்காக நிர்மானிக்கப் பட்ட சிலை.



நொபெல் பரிசு வழங்கும் ஒரு சந்தர்ப்பம்.




நினைவு முத்திரைகளில் சில..



அல்ஃப்ரட் நொபெல் தூபி.






நொபெல் விருது

(-அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார கார்ட்டூன் படம்






# நகம் கடித்தல் உளவியல் பிரச்சினைகளின் வெளிப்பாடா...?

நம்மில் சிலர் இக்கட்டான சூழ்நிலைகளின் போது, கைவிரல் நகங்களைக் கடிக்கும் பழக்கத்தினைக் கொண்டிருக்கின்றனர். நகம் கடிக்கும் பழக்கம் ஒருவரிடத்தில் பெரும்பாலும் குழந்தைப் பருவத்திலேயே தொடங்கிவிடுகின்றது. பலர் இப்பழக்கத்தினை தமது சிறு வயதிலேயே கைவிட்டாலும், குறிப்பிட்ட சிலரால் இப்பழக்கத்திலிருந்து மீளவே முடியாமல் இருக்கும்.

நகம் கடிக்கும் பழக்கத்தை பண்பாடற்ற ஒரு செயலாகவே பலரும் கருதுகின்றனர்.





எவ்வாறாயினும், மன அழுத்தம், மன முரண்பாடுகள், மனக்குழப்பம், தாழ்வு மனப்பான்மை, போன்ற பல்வேறு உளவியல் பிரச்சினைகளின் காரணமாகவே நகம் கடிக்கும் பழக்கம் ஏற்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். நகம் கடிக்கும் பழக்கமுடையவர்கள் பற்றி பல ஆய்வுகளும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில வருமாறு:

★ சிறுவர்களில் 30 சதவீதமானோர் நகங்களைக் கடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர்.

★ வயது வந்தவர்களில் 10-15 சதவீதமானவர்கள் நகங்களைக் கடிக்கும் பழக்கமுடையவர்கள் ஆவர்.

★ நகம் கடிக்கும் பழக்கம் ஆழ்மன அழுத்தத்தின் வெளிப்பாடாகும் என சில உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

★ கற்றலின்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தாழ்வு மனப்பான்மை, தோல்விகள், பின்னடைவுகள், பய உணர்வு, பரீட்சைகள் நெருங்குதல் போன்ற சூழ்நிலைகளின்போது, நகங்களைக் கடிப்பதன்மூலம் பிள்ளைகள் தமக்கு ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைத்துக்கொள்கின்றன என்று ஜேர்மனிய உளவியலாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# சுழலும் கேபிள் கார்




'கேபிள் கார்' பற்றி ஏற்கனவே அறிந்திருப்பீர்கள். இரண்டு மலைகளுக்கிடையே 'கேபிள்' இணைப்பின் வழியே பயணிகளை ஏற்றிச் செல்லும் பயணமுறையே 'கேபிள் கார்' பயணமாகும். ஆனால், 'சுழலும் கேபிள் கார்' பற்றி அறிந்திருக்கிறீர்களா? ஆம்... இப்போது சுழலும் கேபிள் கார் அறிமுகமாகியுள்ளது. எங்கு தெரியுமா? சுவிற்ஸர்லாந்து நாட்டில்...

இந்த சுழலும் கேபிள் காரின் சிறப்பு என்னவெனில், உயரமான இரண்டு மலைகளுக்கிடையே கட்டப்பட்டிருக்கும் 'கேபிள்' வழியே பயணிகளைக் கொண்டு செல்லும்போது, நாலாபுறங்களிலும் சுழன்றவாறே அது பயணிப்பதாகும். இந்த சுழலும் கேபிள் காரின் பெயர் 'டிட்லிஸ் ரொடெயார் கொன்டோலா' (Titlis Rotair gondola) என்பதாகும். இவ்வாறு இந்த கேபிள் கார் சுற்றிச் சுழன்றவாறே பயணிப்பதால், இதில் பயணிக்கின்ற பயணிகளுக்கு உயரத்தில் இருந்தவாறே சுற்றுப்புறத்தை நாலாபுறங்களிலும் பார்த்து ரசிக்கக்கூடிய வாய்ப்புக் கிட்டுகின்றது.

மத்திய சுவிற்ஸர்லாந்தின் என்கெல்பர்க் எனும் நகரின் மலைகளுக்கிடையில் 9,926 அடி உயரத்தில் இந்த சுழலும் கேபிள் கார் சேவை நடைபெறுகின்றது.

1992 ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக 'கொன்டோலா' எனும் கருவியின்மூலம் இவ்வாறு கேபிள் காரை சுழலச் செய்யும் முறை குறித்து என்கெல்பர்க் நகரில் ஆலோசிக்கப்பட்டது. ஆனால், அப்போதைய போக்குவரத்து திணைக்களம் இதற்கு அனுமதி வழங்க மறுத்திருந்தது. எனினும், தற்போது 22 வருடங்களின் பின்னர் 'எல்ப்ஸ்' மலைப்பகுதியில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்கில், இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 17, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org